ISSN: 2012-6352 Reg. No.: 187317

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி

சமய – சமூக – இலக்கிய வெளியீடு



40/=

மகிமையாய் விளங்கி
பாரினில் ஒளிவீசிடும்
கோடிப் புதுமை செய்யும் புனிதர்
அந்தோனி முனீந்திரர்

ஜூன் - 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஜுன் - 2015

மலர் - 47 இதழ் - 05


• **ஆசிரியர்**
அருட்தந்தை: ரமேஷ் கிறிஸ்றி

• **இணை ஆசிரியர்**
மெற்றில்டா இராஜேந்திரம்

• **துணை ஆசிரியர்கள்**
A.G.இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

• **கணினி வடிவமைப்பு**
சுபாஜெனி சங்கர்



• **வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
மட்டக்களப்பு மறை மாவட்டம்

• **முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் – 44
மட்டக்களப்பு.

• **பதிப்பகம்**
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.


## உள்ளே.....




அன்புடன் உங்களோடு ................ 01
கிறிஸ்தவர்களுக்கெதிரான ........... 02
கடுகுக் கதை ................ 03
திறந்திருக்கும் சொர்க்கத்தின் ....... 04
பொறி ................ 06
சர்வ சமய சிந்தனையில் ............. 08
மாணவர் பக்கம் ................ 11
விண்ணுலகினதும் ................ 12
வெங்காயம் சிறிதானாலும் .......... 14
கோடி அற்புதம் செய்யும் ............ 16
ஒரு கோப்பைப் பால் ................ 19
புனிதர்களை அறிவோம் ............. 21
உலகெங்கும் மரியாளின் ............. 22
இதுதான் அரசியல் ................ 23
எண்ணிப்பார்க்கையில் ................ 24
திருஅவைச் செய்திகள் ................ 25
இலக்கிய மஞ்சரி ................ 26
திருவிவிலியம் கற்போம் ............. 27
அறிவை வளர்ப்போம் ................ 28


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com



விலை : 40/=
ஆண்டு சந்தா : 450/=
(தபாற் செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு ...!

இவ் வருடத்தின் அரையாண்டைக் கடந்துசெல்ல விரும்புகின்றோம். இம்மாதம் பதுவைப் புனிதர் புனித அந்தோனியாரின் பெருவிழா மாதமாகும். இம்மாதத்திலே தொண்டன் வாசகர்களாகிய உங்கள் அனைவருக்கும் பதுவைப் புனிதர் புனித அந்தோனியாரின் அருளும், ஆசீரும் உரித்தாகட்டும்!

மகிமையாய் விளங்கி
பாரினில் ஒளிவீசிடும்
கோடிப் புதுமை செய்யும்
புனிதர் - அந்தோனி முனீந்திரர்
உபத்திரவப் படுபவரின் சிநேகிதராம்
ஆறுதல் தேடுபவரின் அணைத்திடும்
உபகாரியாம் தம் திருக்கரத்தில்
பாலன் இயேசுவை ஏந்திடும்
வரம் பெற்ற புனிதராம்
நம் அந்தோனி முனிந்திரர்
அவர் கற்பில் உத்தமமான
லில்லி புஷ்பம் - ஆராதனைக்குரிய
உயர் புனிதர் - நம்
அனைவரின் உள்ளங்களைத் தொட்டு
ஆசீரும் அருளும் வழங்கும்
பாதுகாவலராம் அவர்.

அந்த அந்தோனியாரின் பெருவிழாவை நாம் ஆனி மாதம் 13ம் நாள் கொண்டாடுகின்றோம். மாதத்தின் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும் தம் பக்தியில் துவண்டு கிடக்கும் உள்ளங்களை தன் அன்பாலும், பாசத்தாலும் தன் ஆலயம் நோக்கி ஈர்த்தெடுத்து தன் ஆசீராலும் அருளாலும் நிரப்பும் நம் புனிதர் புனித அந்தோனியார் சாதி, மதம், இனம், மொழி என்ற வேறுபாடுகளைக் கடந்து அனைவராலும் ஆராதித்துப் போற்றப்படும் புனிதர் ஆவார்.

கடன் கஷ்டங்களாலும், வியாதிகள் தொல்லைகளாலும் அவதியுற்று வருபவர்களை, விஷேசமாகப் பேய், பில்லி, சூனியங்களால் துடிப்பவர்களுக்கு உடன் பதில் கொடுத்து காப்பாற்றவல்ல புனிதர் அவர். அவரை நாடித் தேடின யாவரையும் கைவிடாமலும், கை நெகிழாமலும் அரவணைத்து அருள் ஆசீர் வழங்கிக் கொண்டிருக்கும் புனித அந்தோனியார், இம் மாதம் தொண்டன் வாசகர்களாகிய உங்கள் அனைவரது இல்லங்களிலும் தம் கோடி கோடிப் புதுமைகளில் ஒரு புதுமையாலாவது உங்கள் அனைவரையும் நிரப்பவல்லவராக இருக்கின்றார். சூசை, மரியின் நாமத்திற்கு அடுத்ததாக வைத்துப் போற்றப்படும் புனிதர், புனித அந்தோனியாராகும். அவரது திரு நாக்குக்கூட இன்றும் அழிவுறாததாகப் போற்றப்பட்டும் வருகின்றது. அவ்வாறான புனிதர்,

கடும் தவத்தால் செபத்தால்
ஆண்டவரின் நெருங்கிய அன்புக்கு
பாத்திரரானவர்
இறைவாக்கு உரைத்திட
மீன்களும் கூட தண்ணீருக்கு
வெளியே நின்று போதனை
கேட்கச் செய்தவர் நம் புனிதர்
நற்கருணைப் பிரசன்னத்தில்
ஆண்டவரின் பிரசன்னம் உரைத்திட,
கழுதைகளைக் கூட
மண்டியிடச் செய்த கோடி புதுமைப்
புனிதர் நம் அந்தோனி முனீந்திரர்
அவர் புகழ் பாரினில்
மணம் கமழும் மல்லிகைத் தோட்டம்
நஞ்சுணவை சிலுவையால்
நல்லுணவாய் மாற்றிய
வரம் பெற்ற நம் அன்புப் புனிதர்
கோடி அற்புத வரத்தார்
இறைவனின் நேசத் தோழன்
அவரின் புகழ் நம் அனைவரையும்
சாட்சிய வாழ்வுக்கு அழைத்துச் செல்லட்டும்

நம் புனிதரிடத்திலே இம்மாதம் நம் மறைமாவட்ட ஆயர், குருக்கள், அருட்சகோதரர், அருட்சகோதரிகளின் பணிவாழ்வு மேம்பட வேண்டுகிறோம். பொதுநிலையினரான உங்கள் அனைவரின் ஆன்மீக வாழ்விலும், குடும்ப வாழ்விலும் துணைவேண்டி மன்றாடிப் புதுமைகளைப் பெற்றிடுங்கள். அத்தோடு நம் தொண்டன் புத்தகத்தினை வெளியிடும் சமூகத் தொடர்பு நிலையத்தின் வளர்ச்சிக்கும் ஆசீருக்குமாகத் தொண்டன் வாசகர்களாகிய நீங்களும் மன்றாடுங்கள்.

ஆசிரியர்

இறைவாக்கு
"இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர்" (லூக்கா 11:28)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**CATHOLIC BISHOPS' CONFERENCE IN SRI LANKA**

Lankarama, 19, Balcombe Place, Colombo - 08, Sri Lanka.

Tel. No : 0094-11-2697062 / 2697110
Fax No : 0094-11-2699619
E-mail : EpiscopalSL@gmail.com

## கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய அறிக்கை

இலங்கைக் கத்தோலிக்க ஆயர்களின் பேரவையானது உலகின் சில பகுதிகளில் பெரும் எண்ணிக்கையிலான கிறிஸ்தவர்கள் கொடூரமாகப் படுகொலை செய்யப்படுவதையிட்டு ஆழமான கரிசனை கொண்டுள்ளது. இவர்கள் தங்களது செபம், மற்றும் வழிபாடுகளின் போது எவ்வாறு மிருகத்தனமாக கொல்லப்பட்டுள்ளார்கள் என்பதை மிகுந்த வருத்தத்தோடு அவதானிக்கின்றோம். பல குழந்தைகள் மற்றும் மனித சமுதாயத்தின் அப்பாவிகள் இப்படிப்பட்ட சொல்ல முடியாத மிருகத்தனமான வன்செயல்களுக்குப் பலியாகி வருவதைக் கேள்வியுற்று அதிர்ச்சி அடைகின்றோம்.

அந்த வகையில் ஒருவர் தனது சமய மார்க்கத்தைப் பின்பற்றும் மிகமுக்கிய அடிப்படை உரிமையானது மனிதாபிமானத்திற்கு முரணான செயற்பாடுகளால் மீறப்படுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். உயிர் என்பது மனிதனுக்கு அளிக்கப்பட்ட இறைவனது அதி உன்னத கொடை. எனவே, ஒவ்வொருவருக்கும் தனது தெரிவிற்கு ஏற்றாற்போல சமயத்தைப் பின்பற்றும் சுதந்திரம் உண்டு. அத்தகைய வகையில் ஒருவரது சமய மார்க்கம் மட்டும் அவரது மரணத்திற்குக் காரணமாக அமைந்துவிட முடியாது. ஏனென்றால், எவருமே கடவுளின் பெயரினால் கொலைசெய்ய முடியாது.

இந்த சகோதர சகோதரிகளுடைய விசுவாசத்தின் உன்னத தியாகத்தை, அதியுயர் மதிப்பும் மரியாதையும் மிக்க ஒன்றாக நாங்கள் கருதுகின்றோம். இவ்வருந்தத்தக்க இழப்பினால் துயருறும் அனைவருடனும் நாமும் ஆழமான செபத்தில் இணைந்துகொள்வோம். இறைவன் அவர்களது குடும்பங்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் ஆறுதலும் திடமும் தேற்றுதலும் அளிப்பாராக! தமது கிறிஸ்தவ சீடத்துவத்தை வாழ, கசப்பான முடிவுகளை ஏற்று கொடூரமான துன்பங்களுக்கு மத்தியில் வாழும் எமது சகோதர சகோதரிகளை உணர்வு பூர்வமாக நினைவு கூரும்படியாக எமது விசுவாசிகளை ஆழமாகத் தூண்டுகின்றோம். இந்தத் தீவிரவாதம் மற்றும் வன்முறைகளில் யாரெல்லாம் ஈடுபட்டுள்ளனரோ அவர்களின் செயற்பாடுகள் விரைவாக நிறுத்தப்பட்டு, எஞ்சியுள்ள அப்பாவி மனிதர்கள், குழந்தைகள் மற்றும் வளர்ந்தவர்கள் காக்கப்பட வேண்டுமென்று இடைவிடாது இறைவனிடம் இரந்து வேண்டுவோமாக!

அனைத்து மக்களுக்கும் தமது விருப்பிற்கும், சுதந்திரத்திற்கும் ஏற்ப மதங்களைப் பின்பற்றுவதற்கான அடிப்படை உரிமை இருக்கின்றது. எனவே, உலகின் எல்லா அரச தலைவர்களையும் மற்றும் நல்மனம் கொண்ட அனைத்து ஆண்கள், பெண்களையும் அவர்களது அதிகாரத்திற்கு உட்பட்டவகையில் மதத்தின் அடிப்படையிலே வெளிப்படையாக நடத்தப்படுகின்ற இந்த அப்பட்டமான வன்முறைகளையும், படுகொலைகளையும் நிறுத்துவதற்குத் தேவையான தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு நாங்கள் திடமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையானது 07 ஆனி 2015ல் கொண்டாடப்படவிருக்கின்ற கிறிஸ்துவின் திருவுடல், திரு இரத்தப் பெருவிழாவைச் செப தபத்தினுடைய நாளாகப் பிரகடனப்படுத்திப் பாதிக்கப்பட்ட நாடுகளிலுள்ள இறந்தவர்களின் சகோதர சகோதரிகளுக்கு எமது உடனிருப்பைத் தெரிவிக்கத் தீர்மானித்துள்ளது. எனவே, பாவங்களுக்குப் பரிகாரமாகத் தன்னையே முழு முதற்பலியாக சிலுவையிலே ஒப்புக்கொடுத்துத் தனது இறுதித் துளி இரத்தத்தையும் சிந்திய இயேசுவின் அளவில்லாத அன்பை நினைவுகூரும் இந்நாளிலே, எமது அனைத்துப் பங்குகளிலும், துறவறச் சபைகளிலும் ஒரு செப வழிபாட்டை ஒழுங்குபடுத்தி கடவுளின் தலையீட்டினால் இவ்வாறான மிருகத்தனமான வன்செயல்கள் நிறுத்தப்பட வேண்டும் எனப் பிரார்த்திப்போமாக!

✠ அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித்
தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை
கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர்

CATHOLIC BISHOPS' CONFERENCE SRI LANKA

✠ மேதகு கலாநிதி வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை
பொதுச் செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை
சிலாப மறைமாவட்ட ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகிறோம்!

கடந்த 16.05.2015 அன்று தமது 75வது பிறந்த நாளை எமது அன்புக்கும் மதிப்பிற்குமுரிய மன்னார் ஆயர் மேதகு: இராயப்பு யோசப் ஆண்டகை மகிழ்வோடு கொண்டாடினார். தொண்டன் அவர் இறையருள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிறது.



இந்தியாவிலுள்ள பெங்களூரில் அமைந்துள்ள தேசிய விவிலிய மறைக்கல்வி திருவழிபாட்டு நடுநிலையம் நடாத்திய "உலகிலும் திருச்சபையிலும் சங்க ஒளியில் பொதுநிலையினரின் தலைமைத்துவம்" பற்றிய கருத்தரங்கு வைகாசித் திங்கள் 4ந் திகதி முதல் 10ந் திகதி வரையிலான 7 நாட்கள் நடைபெற்றது.

இலங்கையின் தமிழ் மறைமாவட்டங்களில் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மறைமாவட்டங்கள் ஒவ்வொன்றிலுமிருந்தும் 5 பேராக மொத்தம் 10 பேர் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர். மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலைய உதவி இயக்குநரும், தொண்டன் சஞ்சிகையின் இணை ஆசிரியருமான செல்வி: மற்றில்டா இராஜேந்திரம் அவர்களும் இதில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.




## தாத்தாவும் பேரனும்



அன்ரன், தனது நண்பர் கிருபை வீட்டிற்குச் சென்றிருந்தார். இருவரும் நீண்டநேரம் உரையாடிக் கொண்டிருந்தனர். நண்பரின் தகப்பனாருக்கு வயது தொண்ணூறு. அன்று அவரின் பிறந்தநாள். விடைபெறும்போது அன்ரன், நண்பனின் தந்தையிடம் கூறினார், "அடுத்த பிறந்தநாளுக்கும் உங்களை வாழ்த்த இறைவன் அருள் பாலிக்க வேண்டும்"

உடனே தாத்தா சொன்னார்: "ஏன் .... நீ நல்ல ஆரோக்கியமாகத்தானே இருக்கின்றாய்...."

அன்ரன் தாத்தாவின் குறும்பை இரசித்துக் கொண்டார். அப்போது தாத்தாவின் கையில் பந்து ஒன்று வந்து வீழ்ந்தது.

பேரன் ஓடிவந்து பந்தைக் கேட்டான். தாத்தா கோபமாக,

"உன்ன நான் கெதியில திருந்துவன்....? என்றார்.

உடனே அப்பையன் தாத்தாவிடம் சொன்னான்: "நீங்க என்ன மெக்கானிக்கா....? இப்போது அன்ரன் விறைத்துப் போனார்.



கடுகுக் கதை - 66

பத்தி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறந்திருக்கும் சொர்க்கத்தின் கதவுகள்



விருந்தோம்பல் மனித பண்பாட்டின் மகத்துவம்:
"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"
என்பது மனித அறத்தின் கோஷம்.

இல்லறத்தில் ஈடுபட்டுச் சமூகக் கடமைகளை ஒழுங்காகச் செய்பவர்களுக்கு, முற்றும் துறந்த முனிவர்களுக்கு முன்னதாகவே சொர்க்கத்தின் கதவுகள் திறந்திருக்கும் என்கிறது மகாபாரதம். இதற்குக் காரணம் முனிவர்களுக்கும் விருந்தோம்பும் பொறுப்பு இல்லறத்தாருக்கே இருக்கிறது எனலாம்.

செல்லும் விருந்தை வழியனுப்பி, வரும் விருந்தை வரவேற்கக் காத்திருந்தவர்கள்தான் நம் முன்னோர்கள். பசித்திருப்போரைத் தேடிக் கண்டு பிடித்து, அவர்கள் பசியாறிய பின் தம் பசியை ஆற்றிக் கடவுளின் அருள்பெற்றவர்களின் கதைகளும், "அடையா நெடுங் கதவும் அஞ்சேல் என்ற சொல்லும் உடையான் சடையப்ப வள்ளல்" என்று கூறும் இதிகாசங்களும் சான்று பகர்வதையும் காணமுடிகிறது.

கொலு வைத்து, வீடு வீடாக அழைப்பு விடுத்து உபசரிக்காமல் நவராத்திரி இல்லை. தெரிந்தவர்களுக்கும், தெரியாதவர்களுக்கும் அள்ளிக் கொடுத்து மகிழும் உள்ளம் இல்லாதவர்களுக்கு தீபாவளியின் அர்த்தம் புரிவதில்லை. உழைத்தவனுக்கும், உதவியவனுக்கும் நன்றி செலுத்தாத வீட்டில் பொங்கிப் பயனில்லை. தீபாவளியும், கிறிஸ்மசும், ரம்சானும் ஊரும் உலகும் மகிழ்வதற்காகவே உருவான பண்டிகைகள். மதங்களில் பண்டிகைகளுக்குப் பஞ்சமே இல்லை. நான்கு சுவர்களுக்குள் குடும்பம் மட்டும் உண்டு மகிழ்ந்தால் அதற்குப் பெயர் பண்டிகையல்ல. சாதாரண மனிதர்கள் ஆண்டவனை நெருங்கி அனுபவிக்க நம் முன்னோர்கள் உண்டாக்கியவைகளே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பண்டிகைகளும் விழாக்களும்.

ஞானிகள், எளிதில் இறைவனைச் சந்திக்க முடியும். ஆனால், அந்த வரம் சாதாரண மனிதனுக்குச் சாத்தியமில்லை. படித்தவனுக்குத்தான் மொழி புரியும். படிக்காதவனுக்கோ படம்தான் புரியும். பக்தியின் அடிநிலையில் உள்ளவர்களுக்குப் படம் போன்றது இந்தப் பண்டிகைள்தான். எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கிறான் என்ற உண்மையை உணர்த்துவதே மதங்களின் முக்கிய நோக்கமாகும். மண்ணில் உள்ள மாந்தர்கள் யாவரும் கடவுளின் சாயலில் உண்டாக்கப்பட்டவர்கள் என உணர்ந்துகொண்டால், யாரையும் பகைக்கவோ, வெறுக்கவோ, அழிக்கவோ எண்ணம் ஏற்படாது. ஒவ்வொரு நாட்டிலும், வீட்டிலும், விருந்தோம்பல்தான் ஒவ்வொரு பண்டிகையின் அடிநாதமாக விளங்கும். ஒருவன் உண்மையான உள்ளன்புடன் உணவளிக்காவிடின் அவன் வாழும் போதே உயிரற்றவனாகிறான் என்கிறது மகாபாரதம்.

விவிலியத்தை நோக்கிப் பார்த்தோமேயானால், ''பசியாயிருந்தேன் உணவு கொடுத்தீர்கள். ஆடையின்றி இருந்தேன், ஆடை கொடுத்தீர்கள். தாகமாயிருந்தேன் தண்ணீர் கொடுத்தீர்கள்'' என்ற வார்த்தைகளை நிறைவேற்றும் செயல்கள் இல்லறத்தாருக்கே பொருந்துமல்லவா....? தொடக்கநூலின்படி பாவத்தின் ஆரம்பமே உணவில்தான் தொடங்குகிறது. பாவத்தின் சாபத்தைத் தீர்க்க மனுமகன் அப்பத்தின் வீடாம் பெத்லகேமில் மாட்டுத் தொழுவத்தில் தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்டார். இயேசுவின் பணி வாழ்வின்போது விருந்தோம்பல் முக்கியத்துவம் பெறுவதைக் காணமுடிகிறது. தண்ணீரை இரசமாக்கித் திருமண வீட்டை நிறைவு செய்கிறார் இயேசு. இங்கு கடைசிப் பந்தியில் ஏழை எளியவர், ஒடுக்கப்பட்டோர், தாழ்த்தப்பட்டோரும் அடங்குவர். இங்கு சமத்துவம் பேணப்பட்டு மனித மாண்பு மேம்படுவதைப் பார்க்க முடிகிறது. தனி மனிதனொருவனுக்கு உணவு இல்லை என்றால் அச்சமுதாயம் ஒழிக்கப்பட வேண்டுமல்லவா...? இயேசுவுக்கு வந்த முதல் சோதனையே கல்லை அப்பமாக்கிப் புசித்தல். அதுவும் உணவு தொடர்பானதே! ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் சிறுவன் கொடுத்ததினால் அவற்றைப் பலுகிப் பெருகச் செய்து மக்களுக்குக் கொடுத்துப் பசியாற்றி 'கொடுப்பார்க்குக் குறைவேயில்லை' என்ற கூற்றை நிறுவுகிறார். இவ்விதம் இன்னுமொரு சந்தர்ப்பத்திலும் மக்களைப் போஷித்து, அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம் என்று கூறுவதையும் காணமுடிகிறது.

'விண்ணகத்தில் இருந்து இறங்கி வந்த உயிருள்ள உணவு' என்று தம்மை அறிமுகப்படுத்திய அவர், 'எமது அன்றாட உணவை எங்களுக்குத் தந்தருளும்' என்று பிதாவை நோக்கிச் செபிக்கவும் கற்றுக்கொடுத்தார். இறுதி இராப்போசனத்தின்போதும் அப்பங்கள் பங்கிடப்பட்டமையைக் காண்கின்றோம்.



> சாதாரண மனிதர்கள் ஆண்டவனை நெருங்கி அனுபவிக்க நம் முன்னோர்கள் உண்டாக்கியவைகளே இந்தப் பண்டிகைகளும் விழாக்களும்.

அழகான மேசையிலமர்ந்து சுவையான அப்பங்களை உண்பதற்கு முன் அவை எங்கிருந்து, எப்படி வந்தது என நாம் சிந்திப்பது உண்டா....? நிலத்தைப் பண்படுத்தி விதைத்து நீர்பாய்ச்சிப் பராமரித்து விதைகளைப் பதர் நீக்கித் தானியத்தைச் சேகரித்தால் அப்பம் கிடைக்குமா...? உமி நீக்கப்பட்ட தானியம் இடிக்கப்பட்டு, பிசையப்பட்டு பதப்படுத்திய பின் சுடப்பட வேண்டும். நிலம் உடைக்கப்படுவது முதல் நெருப்பில் சுடப்படுவது வரை ஒழுங்காக நடந்தால்தான் பலன் கிடைக்கும். தானியமாக இருக்கும் வரை பயன் ஏது? இத்தனை உடைதலுக்கும் தன்னைக் கொடுக்காதவன், இன்னும் ஒரு ஆத்துமாவின் பசியைத் தீர்ப்பது எப்படி? நாம் கிறிஸ்துவின் பிள்ளைகளாகையால் நாம் பிட்கப்பட வேண்டும். ............

தொடர் 10ம் பக்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குறுங்கதை - 16

# பொறி

- வீக்கேயெம் -

அந்தத் தனியார் கல்வி நிலையத்தில் ஜீ.ஏ.கியூ இறுதிப் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்த நேரமது.

திடீரென ஒரு நாள் அதிபர் தனது அலுவலகத்துக்கு இவனை அழைத்து, 'தனக்கு ஒரு பேருதவி தேவைப்படுவதாகவும், அதற்காக நல்லதொரு வெகுமதி தருவதாகவும் சொன்னபோதே, இவனுக்குச் சர்வ நிச்சயமாக இது ஏதோவொரு பாரதூரமான அத்திபாரமென்பது புரிந்துபோயிற்று.

"சேர், என்னால செய்யக்கூடியதென்றால் நிச்சயம் செய்து தருவேன். நீங்கள் சொன்னால்தானே முடியுமா என்று முயற்சிக்கலாம்" என்றான் இவன்.

இவனால் இது முடியுமென்ற நம்பிக்கை ஏனோ அவர் மனதில் துளிர்விட்டது.

'முயற்சிக்கலாம்' என்று சொன்னதன் அர்த்தம் அதுதானெனப் புரிந்து கொண்டவராய் அவர் மெல்ல வாய் திறந்தார்...

"ஒரு சின்ன அலுவல்தான் தம்பி .... நிச்சயம் உம்மால் ...... நீர் நினைத்தால் அது முடியும்"

என்று பீடிகை போட்டாரே தவிர, விசயத்தைப் புட்டுவைக்க ஏனோ அவர் மனம் சஞ்சலப்பட்டது.

இவன் எதுவானாலும் சிரித்துக்கொண்டே பகிடியாய்க் கதைப்பதால், இவன் செய்வானோ மாட்டானோ என்ற தயக்கமும் ஒரு காரணம்.

"என்ன சேர் யோசிக்கிறியள்? முடிஞ்சால் செய்யிறன், இல்லாவிட்டால் முடியாதென்றுதானே சொல்ல முடியும்"

என்றான் இவன், அவர் நாடி பிடித்துப் பார்த்தவனாக.

தனது சங்கடத்தையே அவன் வார்த்தைகள் வெளிப்படுத்துவதாக உணர்ந்தார்.

வாய் வெச்சாச்சு ... அற நனைஞ்சவனுக்கு குளிரென்ன, கூதலென்ன? என நினைத்தார் போலும். அவர் மெல்லத் திருவாய் மலர்ந்தார்.

அவர் சொன்னதைக் கேட்டதும் இவன் கெக்கட்டமிட்டுச் சிரித்தான்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் சேர், நான் நல்லாய் வருவது உங்களுக்கு விருப்பமில்லையா.....? இது எவ்வளவு பாரதூரமான குற்றமென்று உங்களுக்குத் தெரியாதா....? சொறி சேர்... வெரி சொறி....."

என்று இவன் இருக்கையிலிருந்து எழுந்து கொண்டான்.

"ஓகே தம்பி... நீர் இந்த உதவியை மறுக்காமல் செய்வீரென்று நினைச்சன்.... தற்ஸ் ஓல்.... இதுக்காக கிளாசைக் கட் பண்ண வேண்டாம். பைனல் எக்சாம் .... டோன்ற் மிஸ் அன்டஸ்ரான்ட்!"

என்று சொல்லிக்கொண்டாலும், அவர் முகம் கறுத்ததை அவதானித்தவாறே இவன் வெளியே வந்தான்.

"மனிசருக்கு என்மீதுதான் என்ன ஒரு கரிசனை...."

● ●

"ஹலோ .... மோசஸ் ஐயா, இப்பிடிக் கொஞ்சம் வாறீங்களா....?" என்றான் இவன்.

ஓய்வில் போகும் வயதுதான்... எழுந்து வந்தார்.

"..... இது சரியா, பார்த்துச் சொல்லுங்கோ...."

ஒன்றும் புரியாதவன் போல் இவனும், அதேமாதிரி அவரும்....

"ஆருக்கையா காது குத்திறியள்...? இந்த வயதிலை ஏனையா உங்களுக்கு.... இன்னும் முப்பது வருஷம் சேர்விஸிலை இருக்கவேண்டிய என்னைப் படுகுழியில தள்ளிறதிலை அப்பிடி என்ன சந்தோஷம்....?"

ஏனைய உத்தியோகத்தர்களுக்கு என்ன, ஏதென்று புரியாத குழப்பம்....

"இந்தாங்கோ .... இந்த முதலாவதை மட்டும் விட்டிட்டு.... மற்ற ஒன்பதையும் திருப்பி எழுதுங்கோ ...."

என்று சொல்லியபடியே, மற்றையவற்றைக் கான்ஸல் பண்ணிக் கொடுத்தான், இவன்.

மோசஸ் புத்தகத்தையும், பத்திரங்களையும் தூக்கிக்கொண்டு, றைக்கோட் றூமுக்குள் தஞ்சம் புகுந்தார்.

இவன் மேசையை முற்றுகையிட்ட அலுவலரிடம் சொன்னான்:

"ரெண்டு மூண்டு மாதத்துக்கு முன்னம் ஒருத்தர் என்னைக் கேட்டு, நான் மறுத்ததை இவர் கச்சிதமாய்ச் செய்து முடிச்சிருக்கிறார்...."

இவன் புதிர் போட்டான்.

"........ சொல்லடாப்பா ...... என்ன நடந்தது?"

"முதல் கொப்பியிலை மட்டும் 'இந்தியத் தமிழர்' எண்டு எழுதிப்போட்டு, மற்றதுகளிலை அந்த அடையாளத்தை மாற்றி 'இலங்கைத் தமிழர்' என இவர் அங்கீகாரம் கொடுத்திருக்கிறார். எப்படியிருக்கு சமாச் சாரம்....?"

"அட, கோதாரியில போவான்...."

மறுநாள் மோசஸ் அலுவலகத்திற்கு முழுக்குப் போட்டு, விடுப்பில் நின்றார்.

● ●




1865ம் வருடம்
உருவாக்கப்பட்ட கத்தோலிக்க
மறைப் பாடசாலையான
மூதூர் புனித அந்தோனியார்
மகாவித்தியாலயம் (1865–2015)
இவ்வருடம் தனது
'முப்பொன்விழா' வைப்
பூர்த்திசெய்கிறது.
எனவே, தொண்டன் தனது
வாழ்த்துகளை மகிழ்வுடன்
தெரிவித்துக்கொள்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் முதன்மைச் சீடரான சுவாமி விவேகானந்தரால் 1897 மே மாதம் 01ம் திகதி நிறுவப்பட்ட ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷன் இலங்கையில் தமது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்ற வைபவத்தைச் சிறப்பிக்கும் முகமாக வரையப்படுகின்ற இக்கட்டுரையின் தலைப்பு கல்முனை விழா ஏற்பாட்டுக் குழுவினரால் தரப்பட்டது. இராமகிருஷ்ணரின் இயற்பெயர் விஷ்ணுவின் பெயரான கதாதரன் என்பதாகும். பின்னாளில் அவதார புருஷராக அவர் விளங்கியபோது இராமகிருஷ்ணர் எனும் நாமத்தைப் பெற்றார். இவர் க்ஷுதிராம், சந்திரமணிதேவி தம்பதியினருக்கு நான்காவது குழந்தையாக மேற்கு வங்காளத்திலுள்ள காமார்புகூர் எனும் சிறிய கிராமத்தில் 1836ம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் 18ம் நாள் பிறந்தார். 1886 ஆகஸ்ட் திங்கள் 16ம் நாள் அன்று மகா சமாதி அடைந்தார்.

# சர்வ சமய சிந்தனையில் இராமகிருஷ்ணமிஷன்



இளமையிலேயே பிறரைக் கவரக்கூடிய பேச்சு வன்மையும், நற்குணங்களும், நடிப்புத் திறனும் பக்தியும் அவரிடம் நிறையவே காணப்பட்டன. சிறந்த நினைவாற்றல் உள்ளவர். பரம்பொருளில் ஒன்றிவிடும் சமாதி அனுபவம் கதாதரனுக்கு இளமையிலேயே ஏற்பட்டது. ஸ்ரீ இராமகிருஷ்ணர் உலக வரலாற்றிலே தம் சாயலைத் திடமாகப் பதித்துச் சென்ற அவதார புருஷர். ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சமரச நோக்கு பட்டும் படாமலும் இருக்கும் நிலையிலிருந்து முற்றிலும் வேறுபட்டுப் பரந்த சமய மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்டது. ஒரு இந்து தமது இந்து மதத்தையும், ஒரு முஸ்லிம் தமது முஸ்லிம் மதத்தையும், ஒரு கிறிஸ்தவர் தமது கிறிஸ்தவ மதத்தையும் பக்தி பூர்வமாக அனுசரிக்க வேண்டும். ஆனால், அதே சமயத்தில் மற்ற மதங்களும் உண்மை என்பதை அங்கீகரிக்க வேண்டும் என்ற பொருளில்தான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் சர்வ சமரசத்தைப் போதித்தார். பிற சமயங்களைச் சகித்துக் கொள்ளுதல் மட்டுமன்றி மற்ற நெறிகளும் தம் மதத்தைப் போன்று சரியான வழி என்பதையும் அங்கீகரித்தல் வேண்டும் என ஸ்ரீ இராமகிருஷ்ணரின் கூற்று வலியுறுத்துகின்றது.

(சுவாமி தபசியானந்தர்: மொழிபெயர்ப்பு நூல்: ஸ்ரீ இராமகிருஷ்ண மடம் சென்னை. பக்கம் 93-94)

ஸ்ரீ இராமகிருஷ்ணர் ஏனைய மதங்களாகிய இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களிலுள்ள உண்மையைக் கண்டறிய முயற்சி செய்தார். இஸ்லாமிய மதத்திலே தீட்சை பெற்றார். அந்த மதத்தில் முழு மனதுடன் ஈடுபட்டார். முஸ்லிம் போல் உடை தரித்தார். குறிப்பிட்ட வேளையில் தொழுகை புரிந்தார். முஸ்லிம்கள் உண்ணும் உணவுகளைத் தாமும் உண்டுவந்தார். இது நடைபெற்றது 1866இல்.

ஏழு வருடங்களுக்குப் பிறகு கிறிஸ்தவ மதத்தை அனுசரித்தார். தேவமாதா குழந்தை இயேசுவைக் கையில் ஏந்தியிருந்த வசீகரமான படம் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் பதிந்தது. அப்படம் உணர்வுடன் கூடியதாக இவருக்குத் தெரிந்தது. அதிலிருந்து ஒரு சக்தி இவருக்குள் புகுந்ததை உணர்ந்தார். மூன்று தினங்கள் அந்த மனநிலையிலேயே இருந்தார். பஞ்ச வடிவில் அருகே நடந்து கொண்டிருக்கும் போது தேஜோமயமான ஒரு உருவத்தைக் கண்டார். ஸ்ரீ இராம கிருஷ்ணரின் உள்ளத்தின் ஆழத்தினின்று ஒரு குரல் "இயேசு கிறிஸ்து உயர்ந்த யோகி. இறைவனின் அன்புச் செல்வன்" என்று அவருக்குக் கேட்டது.

இவ்வாறே மற்ற மதங்களைப் பற்றியும் கருத்துகள் இவருக்கு இருந்தன. புத்தர் 'அவதார புருஷர்' என்ற கருத்து அவருக்கு இருந்தது. புத்தரின் போதனைகளுக்கும், உபநிடதங்களுக்கும் எவ்வித முரண்பாடுகளும் இல்லை என்பது இவரது கருத்தாகும்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் தமது அறையிலே மகாவீரர், இயேசுக் கிறிஸ்து ஆகியோரின் படங்களையும் வைத்திருந்ததிலிருந்து அவரது சமரச நோக்கு புலனாகின்றது. இப்படங்களின் முன் ஊதுபத்தி ஏற்றுவார். இதனாலேயே வேறுபட்ட மதங்களின் ஆன்மீகத் தத்துவத்தைக் கண்டு, 'எத்தனை மதங்களோ அத்தனை வழிகள்' என்று கூறி இன்றைய மனித குலத்தின் ஒற்றுமையை வலியுறுத்தினார்.

வேறுபட்ட மதங்களில் உள்ள அடிப்படைத் தத்துவங்களைப் பாராட்டத் தெரியாதபடியால், மதங்களைப் பின்பற்றுகிறவர்கள் தங்களுக்குள் முரண்படுகின்றார்கள்.

## தெரிந்துகொள்வோம்...!

ஆசிரியர் பாடம் நடத்தும் போது ஒரு மாணவன் கிண்டலாக ஏதோ சொல்ல, எல்லா மாணவர்களும் 'கொல்' எனச் சிரித்தனர். கோபமான ஆசிரியர், நடத்திய பாடத்தில் கேள்வி கேட்க ... யாரும் சரியாகச் சொல்லாதபோது, முதலில் கிண்டல் செய்த மாணவன் மட்டும் சரியாகச் சொன்னான். மற்ற அனைவரையும் ஆசிரியர் பெஞ்சின் மேல் நிற்க வைத்தார். விடையைச் சரியாகச் சொன்ன மாணவனும் பெஞ்சின் மேல் ஏறி நின்றான்.



"தம்பி.... நீதான் சரியாகப் பதில் சொல்லிவிட்டாயே, அப்புறமேன் பெஞ்சின்மேல் ஏறி நிற்கின்றாய்....?" என ஆசிரியர் கேட்க, "அய்யா ... முதலில் கிண்டல் செய்தது நான்தான். அதனால்தான் மாணவர்கள் சிரித்தனர். அதுவே உங்களைக் கோபமூட்டி, கேள்வி கேட்க வைத்து, தண்டனையும் தர வைத்தது. இத்தனைக்கும் நானே காரணம். நான்தான் தண்டனைக்குரியவன்" என்ற மாணவன் பெயர் நரேந்திரன். பிற்காலத்தில் சுவாமி விவேகானந்தர்.

இன்றைய காலகட்டத்தில் தமது உண்மை நோக்கை மறைத்து அரசியல் தலைவர்களிடம் சமயக் கோட்பாடுகளைப் போர்த்துகின்ற சமயத் தலைவர்களை நாம் பார்க்கின்றோம். பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெறுவதற்காகச் சமயத்தைப் பயன்படுத்துகின்றனர். 'குறி ஒன்றே வழி பல' என்பதனை உணர்ந்து ஆன்மீக வழியில் மற்றவர்களும் யாத்திரிகர்கள் என்று தங்களைப் பின்பற்றுவோர் கருதும்படி மதத் தலைவர்கள் ஊக்குவிக்க வேண்டும்.

விடுதலைப் பயணம் எல்லாச் சமயங்களிலும் அடிநாதமாக உள்ளது. மனித மீட்பின் முக்கிய அம்சங்கள் பின்வருவன ஆகும்.

தப்பெண்ணங்கள், அவநம்பிக்கைகள், பயம், பகைமை, யுத்தம் மேலும் சமூக அநீதிகள், பிறழ்வான பாலியல் வன்செயல்கள், சாதி அதிகாரவேட்கை, இலாப நோக்கு ஆகியவற்றிலிருந்து மனிதன் விடுதலை பெற விரும்புகின்றான். இலங்கையில் நான்கு பெரும் மதங்கள் உள்ளன. அவைகளின் தத்துவங்கள் வேறாக இருந்தாலும் ஆன்மீக விழுமியங்கள் ஒன்றாகவே காணப்படுகின்றன. இதை நான்கு வகையாக மதிப்பிடலாம். ஆளுமைத் தன்மை, சுயநலமற்ற தன்மை, மற்ற மனிதர்களைப் பற்றிய ஆழ்ந்த கவனமும், அவர்களது வாழ்க்கை மேன்மையும், மனித உயிர்களைப் பாதுகாத்தலும், இயற்கையைப் பாதுகாத்தலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். எனினும் எல்லா மதங்களும் பெண்களுக்குத் தமது சமூகத்தில் முதன்மையளிக்கின்றன என்று கூறமுடியாது.

நான்கு பெரும் மதங்களின் இருப்பிடமாகிய இத்திரு நாட்டிலே மிக அழகான சமயப் போதனைகள் இடம்பெறுகின்ற போது, ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை ஏன் இல்லாமல் போய்விட்டது? இந்தப் போதனைகளுக்கும் நமது உண்மை வாழ்க்கைக்கும் இடையே ஏன் பெரும் வேற்றுமைகள் காணப்படுகின்றன? இதற்கு இலகுவான விடை, நமது மனதின் பலவீனம் என்றோ அல்லது மேற்கத்திய செல்வாக்கு என்றோ கூறிவிடலாம்.

ஒரு காலத்தில் எல்லாவற்றிற்கும் ஏகாதிபத்தியவாதம் என்று கூறிக்கொண்டோம். 60 ஆண்டுகள் சுதந்திரத்திற்குப் பின்பு நாம் பழைமையைக் குறை கூறமுடியாது. நமது பகிரங்க ஆன்மீக வாழ்வின் தளர்ச்சிக்கு நாமே பொறுப்பேற்க வேண்டும்.

வழிபாட்டுத் தலங்களை நாம் மிக உயர்வாக எண்ணுகின்றோம். அங்கு சமயச் சடங்குகள், வைபவங்கள் நிறைவாக உள்ளன. அரசியல், சமயத்தை விழுங்கிவிடக்கூடிய அளவுக்கு அரசியல் சமயவாதிகளினால் நெருக்கமாக வரவேற்கப்பட்டுள்ளது. சமயங்கள் அரசியலுடன் கலப்புடையதாக மாறிவிட்டன.

சமய அனுஷ்டானங்கள் நாளாந்த மனித வாழ்க்கையில் பிரதிபலிக்கத் தவறிவிட்டன. சமயங்கள், குறிப்பிட்ட சில சமூகக் குழுக்களின் அபிலாசைகளோடு பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளதாகக் காணப்படுகின்றன.

மிகுதி அடுத்த இதழில்.....

– அருட்திரு: கலாநிதி: S.A.I. மத்தியூ.

## திருத்தந்தையைப் பாதுகாக்க பாரம்பரிய நாளில் பதவியேற்ற சுவிஸ்



*திருத்தந்தை பிரான்சிசைப் பாதுகாக்கும் அதிகாரிகளின் குழுவில் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த 32 வீரர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். வத்திக்கான் நகரில் உள்ள **St Peter's Basilica** தேவாலயத்தில், புதிய சுவிஸ் பாதுகாப்பு வீரர்கள் பதவியேற்கும் பாரம்பரிய நாளான மே 6ம் திகதி சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சுவிட்சர்லாந்து நாட்டின் உள்துறை அமைச்சரான **Alain Berset** கலந்து கொண்டார்.*

*இந்த நிகழ்ச்சிக்கு பிறகு, வாலெஸ் மண்டலத்தை சேர்ந்த 8 அதிகாரிகள் உட்பட 32 பேர், திருத்தந்தையின் பாதுகாப்புக் குழுவில் புதிதாக நியமிக்கப்பட்டனர். இந்த நிகழ்ச்சியில், புதிதாக நியமிக்கப்பட்ட 32 வீரர்கள் திருத்தந்தையைக் கவனத்துடன் பாதுகாப்போம் என்ற உறுதி மொழியை எடுத்துக்கொண்டனர்.*

*கத்தோலிக்க மரபுப் படி, திருத்தந்தையைப் பாதுகாக்கும் குழுவில் சுவிட்சர்லாந்தை சேர்ந்த 110 வீரர்கள் நியமிக்கப்படுவார்கள்.*

*19 முதல் 30 வயதிற்குள் இருக்கும் இவர்கள் அனைவரும் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். இது கடந்த 500 வருடங்களாக முறையாக பின்பற்றப்படும் மரபு ஆகும்.*

**திறந்திருக்கும் சொர்க்கத்தின் ....**

இல்லையேல், உலகின் பசியை ஆற்றுகிற ஆதாரமாக நாம் பயன்பட முடியாது. அறமற்ற செயல்களைச் செய்யாமல், சமத்துவத்தைப் பேணி நடத்தல் விண்ணகம் செல்வதற்கான நிபந்தனைகள் என்று எண்ணி, நம் வாழ்வை மகிழ்ச்சியுடன் அனுபவிப்போம். சொர்க்கத்தின் கதவுகள் நமக்கென்றே திறந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்தோலிக்க திருமறை

# மாணவர் பக்கம்

## க.பொ.த. (உயர்தரம்)

-நில்மினி கஜேந்திரன்-

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த காலகட்டத்திலே, கண்டியை ஜெயவீர என்ற அரசன் ஆண்டுவந்தான். கோட்டை, சீதாவாக்கை அரசர்களின் மைத்துனரான இவர் வீர பராக்கிரமபாகு என்றும் அழைக்கப்பட்டார். சீதாவாக்கை அரசனான மாயாதுன்ன கண்டி அரசின்மேல் கண் வைத்திருப்பதை அறிந்த ஜெயவீர அச்சம் கொண்டு போர்த்துக்கேயரின் உதவியை நாடினான். தனது அரசினைப் பாதுகாப்பதற்காகப் படை வீரர்களைத் தந்துதவுமாறு 1545ல் உதவி கேட்டுக் கோவைக்குத் தன் தூதர்களை அனுப்பினான். இதற்கான சரியான வழி தான் கிறிஸ்தவனாக வர விரும்புவதாக அறிவிப்பதே என நினைத்து சில மறைபரப்பாளர்களைக் கண்டிக்கு அனுப்பும் படி கேட்டு, பிரான்சிஸ்கன் சபையினருக்கு விண்ணப்பித்தார். இதன் நிமித்தம் கொழும்பில் இருந்து பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள் சிலர் உடனடியாக அனுப்பப்பட்டனர். அரசனும் அவர்களை வரவேற்றுக் கண்டி அரசினுள் கிறிஸ்தவ மதத்தினைப் பரப்ப அனுமதி அளித்தான்.

மேலும், ஒரு தேவாலயம் கட்டிக்கொடுக்கப்பட்டது. அவர்கள் தங்குவதற்கு ஒரு மடமும் கட்டிக்கொடுக்கப்பட்டது. கோவைக்குச் சென்ற தூதுவர்கள், படைவீரர்களுடன் திரும்பி வர முன்னரே அரசன் இரகசியமாய்த் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவத்தைத் தழுவிக்கொண்டான். தூதுவர்கள் முப்பத்தெட்டுப் போர்த்துக்கேயருடன் வந்து, கண்டியில் பாஸ்கா விழா கொண்டாடப்பட்டபோதுதான் திருமுழுக்குப் பெற்றுக் கிறிஸ்தவனாகி விட்டதைப் பகிரங்கமாய் அறிவித்தான். அவ்வேளையே சில அரச முக்கியஸ்தர்களும் பிரஜைகளும் திருமுழுக்குப் பெற்றுக் கிறிஸ்தவத்தைத் தழுவினர்.

அரசன் ஜெயவீர அரசியல் நோக்கத்திற்காகத் திருமுழுக்குப் பெற்றாரே தவிர, கிறிஸ்தவத்திற்காகத் தன்னை அர்ப்பணிக்கவில்லை எனக் கூறிக் காலப்போக்கில் போர்த்துக்கேயருக்கு எதிராகவும், மறைபரப்பாளர்களுக்கு எதிராகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டான். இதனால், இவரின் மகன் கரலியட்ட பண்டாரன் இதனைப் பொறுக்க முடியாமல் தன் தந்தையால் சிறையிலிடப்பட்ட மறைபரப்பாளர்களை விடுதலை செய்து அவர்களுடன் ஊவாவிற்குச் சென்றான்.

அங்கிருந்துகொண்டு படையினரைத் திரட்டித் தன் தந்தைக்கு எதிராய்க் கண்டி அரசரோடு போர் தொடுத்தார். பின்னர் தந்தையை அங்கிருந்து விரட்டிவிட்டு 1550ல் 2ம் ஜெயவீர எனும் பெயருடன் கண்டி அரசனானான். இக்காலகட்டத்தில் மறைபரப்பாளர்கள் மீண்டும் கண்டிக்கு வந்து எந்தத் தடையுமின்றி மறைபரப்புப்பணியை மேற்கொண்டனர். அரசனும் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவனாகி, தன் பெயரை டொன் பிலிப் என மாற்றிக்கொண்டார். இவர் இறுதி வரை திருச்சபைக்குப் பிரமாணிக்கமாய் இருந்த ஒருவராவார்.

கண்டியிலிருந்து விரட்டப்பட்ட ஜெயவீர மாயாதுன்னவிடம் தஞ்சம் புகுந்தார். 1581ல் மாயாதுன்ன இறந்ததும் ராஜசிங்கன் சீதாவாக்கை அரசனானான். 1582ல் இவர் கண்டி அரசுக்கெதிராய்ப் போர் தொடுத்து கண்டியைக் கைப்பற்றினார். இதனால் .....


19ம் பக்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணுலகினதும் மண்ணுலகினதும் மஹா சக்தி அன்பு ஒன்றே!

- வயவர் சுரோஜா -



இறை வடிவமானது அன்பு
குறைகள் மறப்பது அன்பு
நிறைகள் காண்பது அன்பு
நீடித்து நிற்பது அன்பு

உலகம் உருவான காலந் தொடக்கம் முடியும்வரை ஜீவராசிகள் அனைத்தும் வேண்டி நிற்பது அன்பு ஒன்றே! ஒரு குழந்தை தாயின் கர்ப்பத்தில் உருவாகும்போதே தாயினால் அன்புகூரப்படுகின்றான். அதேபோன்று, இறைவனும் கர்ப்பத்தில் இருக்கும் அவனைப் பெயர் சொல்லி அழைத்து, தனது அன்பால் நிறைக்கின்றார். மனிதன் இப்பூவுலகில் பூத்த முதற் கணமே, தாய் தனது பிரசவ வேதனை களை எல்லாம் மறந்து சேயை வாரி அணைத்து வாஞ்சையுடன் முத்த மாரி பொழிகிறாள்.

அன்பு பல்வேறு வடிவங்களில் மலர் கின்றது. குழந்தை தொடக்கம், வயோதிபர் வரை வேண்டி நிற்பது அன்பு ஒன்றே! பணம் இருக்கலாம், படிப்பிருக்கலாம், பட்டங்கள் இருக்கலாம், சொத்துகள் இருக்கலாம், புகழ் இருக்கலாம், சுகபோகங்களும் இருக்கலாம். ஆனால், அன்பில்லாதவன் வெறும் நடைப் பிணமே!

அன்பு நிலையாய் இருப்பது
அன்பு தேனாய் இனிப்பது
அன்பு எல்லோரும் தேடுவது
அன்பு ஊக்கத்தைத் தருவது

அன்பு பல்வேறு வடிவங்களில் பரி மாறப்படுகின்றது.

பெற்றோர் மீது மலரும் அன்பு - பாசம்
பெரியோர் மீது மலரும் அன்பு - மதிப்பு
ஏழை மீது மலரும் அன்பு - கருணை
நண்பர் மீது மலரும் அன்பு - நட்பு
முதியோர் மீது மலரும் அன்பு - தியாகம்
இளையோர் மீது மலரும் அன்பு - இரக்கம்
இளம் பருவத்தில் மலரும் அன்பு - காதல்

கொடிய மிருகங்களான சிங்கம், புலி கள் கூட அன்புக்குக் கட்டுப்பட்டு, இனப் பெருக்கம் செய்யவில்லையா..? முதலில் தன் னைத்தானே நேசிக்கவேண்டும், பூஜிக்க வேண் டும், பாராட்ட வேண்டும், ஆதரித்து ஊக்க மளித்து உற்சாகமூட்ட வேண்டும், ஒருபோதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுத்து ஒதுக்கக் கூடாது. இறைவன் தனக்குத் தந்த தாலந்துகளை இனங்கண்டு, தேவை உடையோரைத் தேடிப் பகிர்ந்தளிக்க வேண்டும். தன்னை அன்பு செய்யாதவன் பிறரை அன்பு செய்யமுடியாது. பிறர் அன்பைப் பெருக்கிய பின்பு இறை அன்பு தானே பிரகாசிக்கும்.

இன்று, அன்புக்காக ஏங்கித் தவிக்கும் உள்ளங்கள் வயோதிப மடங்களில் கைவிடப்பட்ட நிலைகளில்... குலையை வெட்டிய பின்பு குப்பையிற் போடப்பட்ட அநாதைச் சிறுவர்கள் அநாதை இல்லங்களில்.... அன்பின்றி அலை மோதும் அபல நிலைகளில். அதுமட்டுமா யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இளம் விதவைகள் கைவிடப்பட்ட நிலையில் கண்ணீரில் கரைகிறார்கள்.

இவற்றை எல்லாம் எப்போதாவது நாம் சிந்தித்ததுண்டா....? சீர்தூக்கிப் பார்த்ததுண்டா...? மனித நேயம் மரணித்து விட்டதா...? மரண வீடுகளுக்குச் சென்று ஆழ் துயரில் ஆழ்ந்திருப்போர்க்கு ஆறுதல் கூறாது, வரட்டுக் கௌரவத்தில் கல்நெஞ்சர்களாகிய சந்தர்ப்பங்கள் எத்தனை எத்தனை?

இறைவன் கூறுவது உனக்குக் கேட்கிறதா...? ஒவ்வொரு மனிதனும் உன் சகோதரன்.

தியாகத்தின் சின்னம் அன்பு
இரக்கத்தின் இருப்பிடம் அன்பு
ஆனந்தத்தின் இருப்பிடம் அன்பு
பிறர் சினேகத்தின் இருப்பிடம் அன்பு

## டிப்ஸ்

கோடை காலங்களில் ஐஸ்கிறீம் சாப்பிட எல்லோரும் விரும்புவார்கள். ஆனால், சிலருக்கு தொண்டைப் புண், சளி உடனே வந்துவிடும் என்று பயந்து விடுவார்கள். இனிமேல் ஐஸ்கிறீம் சாப்பிட்டவுடன் சூடான வெந்நீரை ஒரு டம்ளர் குடித்துப் பாருங்கள் தொண்டையில் எந்த பாதிப்பும் ஏற்படாது.



அன்பு
கொண்ட
உள்ளம் இறைவன்
வாழும் இல்லம்
அன்பு கொண்ட மாந்தர் கருணை
வடிவமாகும்
அன்பு கொண்ட பிள்ளை இறைவன்
வடிவமாகும்
அன்பு கொண்ட அன்னை இறைவன்
வடிவமாகும்

அன்பைப் பரிமாற சதா புன்னகை பூத்திடுங்கள்
அன்பாகப் பேசுங்கள்
உங்களால் முடிந்ததைக் கொடுங்கள்
நீங்கள் இறைவனிடம் போகும்போது எதைக் கொண்டுபோகப் போகிறீர்கள்...?
கௌரவத்தையா....? புண்ணியப் பொதிகளையா.....?
காலத்தின் தேவைதான் என்ன?
சிந்திப்போம்..... செயற்படுவோம்....

**நேர்வழியை இனங்கண்டு அன்புவழி செல்வோம்**
**தர்மக் கனிகளை அறுவடை செய்வோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்காயத்தில் பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், வெள்ளை வெங்காயம் என மூன்று வகை இருப்பது பலருக்குத் தெரியும். இவற்றில் சின்ன வெங்காயம் மருத்துவ குணம் நிறைந்ததாகும்.!

ஜலதோஷம், நெஞ்சு படபடப்பு ஆகியவற்றுக்கு ஒரு சின்ன வெங்காயத்தை மென்று சாப்பிட்டு, வெந்நீர் குடித்தால் ஜலதோஷம் குறைவதுடன் தும்மலும் நின்று விடும். உடல் சமநிலைக்கு வந்து விடும். இதய நோயாளிகளுக்கு இப்படியான பிரச்சினைகள் வரும்போது முதலுதவிச் சிகிச்சையாக இதைச் செய்யலாம். பொடியாக நறுக்கின சின்ன வெங்காயத்தை நல்லெண்ணெய் விட்டு வதக்கித் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இரத்தக் கொதிப்புக் குறைந்து இதயம் பலமாகும்.

மூல நோயால் அவதிப்படுவோர் உணவில் சின்ன வெங்காயத்தை அதிகமாகச் சேர்ப்பது நல்லது. நீர்மோரில் சின்ன வெங்காயத்தை வெட்டிப்போட்டுக் குடித்தாலும் பலன் கிடைக்கும்.

பொடுகுத் தொல்லை, முடி கொட்டுதல் போன்ற பிரச்சினை உள்ளவர்களுக்கு சின்ன வெங்காயம் நல்ல பலன் தரும். சின்ன வெங்காயத்தை மை போல அரைத்துக் கொள்ளவும். இதை நாட்டுக் கோழி முட்டையின் வெள்ளைக் கருவில் சேர்த்து, நன்றாக அடித்து அல்லது மிக்ஸியில் போட்டு ஒரு சுற்றுச் சுற்றினாலும் போதுமானது. இவ்வாறு செய்யும்போது ஷம்பு மாதிரிப் பொங்கி வரும். அதைத் தலைக்குத் தேய்த்து அரை மணி நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரில் குளிக்க வேண்டும். முட்டை வாடை நீங்க, சீகைக்காய்ப் பவுடரைத் தலைக்குத் தேய்த்துக் குளிக்க வேண்டும். வாரத்தில் ஒரு நாள் வீதம், இரண்டு மாதத்துக்கு இப்படிச் செய்தால் நல்ல பலன் கிடைக்கும்.

தேள் கொட்டிய இடத்தில் வெங்காயச் சாறைத் தேய்த்தால் விஷம் ஏறாது. தலைப் பகுதியில் மொட்டை விழுந்து முடி முளைக்காமல் இருந்தாலும் சின்ன வெங்காயத்தைத் தேய்த்து வந்தால், காலப்போக்கில் முடி முளைக்கும்.




ஆண்களுக்கு மீசைப் பகுதியில் இப்படி இருந்தாலும், இதே முறையைக் கையாளலாம். வெங்காயம் குறைவான கொழுப்புச் சத்து கொண்டது. எனவே, பருமனானவர்கள் தாராளமாக வெங்காயத்தைப் பயன்படுத்தலாம். வெங்காயத்தைச் சுட்டு, சிறிது மஞ்சள், சிறிது நெய் சேர்த்துப் பிசைந்து மீண்டும் லேசாகச் சுடவைத்து உடையாத கட்டிகள் மேல் வைத்துக் கட்டக் கட்டிகள் உடனே பழுத்து உடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலைந்து வெங்காயத்தைத் தோலை உரித்து அதோடு சிறிது வெல்லத்தைச் சேர்த்து அரைத்துச் சாப்பிடப் பித்தம் குறையும், பித்த ஏப்பம் மறையும்.

சம அளவு வெங்காயச் சாறு, வளர்பட்டைச் செடி இலைச்சாற்றை கலந்து காதில் விடக் காது வலி குறையும்.



வெங்காயச் சாறு, கடுகு எண்ணெய் இரண்டையும் சம அளவில் எடுத்துச் சூடாக்கி இளம் சூட்டில் காதில் விடக் காது இரைச்சல் மறையும். வெங்காயத்தைத் துண்டுகளாக நறுக்கி, சிறிது இலவம் பிசினைத் தூள் செய்து சேர்த்து, சிறிது கற்கண்டுத் தூளையும் எடுத்து, அனைத்தையும் பாலுடன் சேர்த்துச் சிறிது சாப்பிட எல்லா மூலக் கோளாறுகளும் நீங்கும். வெங்காய நெடி சில தலைவலிகளைக் குறைக்கும்.

வெங்காயத்தை வதக்கிச் சாப்பிட உஷ்ணத்தால் ஏற்படும் ஆசனக் கடுப்பு நீங்கும்.

வெங்காயச் சாறு சில வயிற்றுக் கோளாறு களை நீக்கும். இதை மோரில் விட்டுக் குடிக்க இருமல் குறையும்.

வெங்காயச் சாற்றையும், வெந்நீரையும் கலந்து வாய் கொப்பளித்து, வெறும் வெங்காயச் சாறை பஞ்சில் நனைத்துப் பல் ஈறுகளில் தடவி வரப் பல்வலி, ஈறுவலி குறையும்.

வெங்காயத்தைச் சமைத்து உண்ண உடல் வெப்பநிலை சமநிலை ஆகும். மூலச்சூடு தணியும்.

வெங்காயத்தை வதக்கி வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர நரம்புத் தளர்ச்சி குணமாகும்.

வெங்காயத்தை வதக்கித் தேன் விட்டு இரவில் சாப்பிட்டு, பின் பசும் பால் சாப்பிட ஆண்மை பெருகும்.

படை, தேமல் மேல் வெங்காயச் சாற்றைப் பூசி வர மறைந்து விடும்.

திடீரென மூர்ச்சையானால் வெங்காயத்தைக் கசக்கி முகரவைத்தால் மூர்ச்சை தெளியும்.

வெங்காயச் சாற்றையும் தேனையும் கலந்து அல்லது வெங்காயச் சாற்றையும், குல்கந்தையும் சேர்த்துச் சாப்பிட்டால் சீதபேதி நிற்கும்.

வெங்காய ரசத்தை நீர் கலந்து குடிக்க நன்கு தூக்கம் வரும்.

வெங்காயம், அவரை இலை இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்துச் சாப்பிட மேக நோய் குறையும்.

பச்சை வெங்காயம் நல்ல தூக்கத்தைத் தரும். பச்சை வெங்காயத்தை தேனில் கலந்து சாப்பிடுவது நல்லது. வெங்காயம் வயிற்றிலுள்ள சிறுகுடல் பாதையைச் சுத்தப்படுத்துகிறது. ஜீரணத்துக்கும் உதவுகிறது.

வெங்காயம் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும், இழந்த சக்தியை மீட்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து புகைப்பிடிப்பவர்கள் வெங்காயச் சாற்றை நாள் ஒன்றுக்கு அரை அவுன்ஸ் வீதம் மூன்றுவேளை சாப்பிட்டு வர நுரையீரல் சுத்தமாகும்.

வெங்காயச் சாற்றோடு சிறிது உப்பு கலந்து அடிக்கடி சாப்பிட்டுவர, மாலைக்கண் நோய் சரியாகும்.

ஜலதோஷ நேரத்தில் வெங்காயத்தை முகர்ந்தால் பலன் கிட்டும்.

வெங்காயத்தை அரைத்து தொண்டையில் பற்றுப்போட தொண்டை வலி குறையும்.

பாம்பு கடித்துவிட்டால் நிறைய வெங்காயத்தை உண்ணவேண்டும். இதனால் விஷம் இறங்கும்.

ஆறு வெங்காயத்தை ஐநூறு மில்லி நீரிலிட்டு, கலக்கிப் பருக சிறுநீர் கடுப்பு, எரிச்சல் நீங்கும்.

வெங்காயம், சோடா உப்பு இரண்டையும் சேர்த்து அரைத்து நாய் கடித்த இடத்தில் தடவி, வெங்காயச் சாறைக் குடிக்க நாய் விஷம் இறங்கும். பிறகு டாக்டரிடம் செல்லலாம்.

வெங்காயச் சாறோடு சர்க்கரை சேர்த்துக் குடிக்க மூலநோய் குணமாகும்.

ஒரு பிடி சோற்றுடன் சிறிது உப்பு, நான்கு வெங்காயம் இவற்றைச் சேர்த்து அரைத்து, ஒரு வெற்றிலையில் வைத்து நகச்சுற்றுள்ள விரலில் காலை, மாலை வைத்துக்கட்ட நோய் குறையும்.

சிறிய வெங்காயத்தில் இன்சுலின் உள்ளது. நீரிழிவு நோயாளிகள் இதை அதிகமாகப் பயன்படுத்தலாம்.

தலையில் திட்டுத்திட்டாக முடி உதிர்ந்து வழுக்கை விழுந்திருந்தால் சிறு வெங்காயத்தை இரு துண்டாக நறுக்கித் தேய்த்துவர முடி வளரும்.

காக்காய் வலிப்பு நோய் உள்ளவர்கள் தினசரி ஓர் அவுன்ஸ் வெங்காயச் சாறு சாப்பிட்டுவர வலிப்பு குறையும்.

வெங்காயத்தைத் தினமும் சாப்பிட்டுவர டி.பி.நோய் குறையும்.

வெங்காயச் சாற்றோடு சர்க்கரை சேர்த்துச் சாப்பிட வாதநோய் குறையும்.

தேள்கொட்டிய இடத்தில் வெங்காயத்தை நசுக்கித் தேய்க்க விஷம் இறங்கும்.

வெங்காயத்தைப் பசும் தயிருடன் சேர்த்துச் சாப்பிட்டுவரத் தாது பலமாகும்.

தினமும் மூன்று வெங்காயம் சாப்பிட்டுவர பெண்களுக்கு ஏற்படும் உதிரச் சிக்கல் நீங்கும்.

வெங்காயத்தைத் துண்டு துண்டாக நறுக்கி விளக்கெண்ணெயில் வதக்கிச் சாப்பிட, மலச் சிக்கல் குறையும்.

வெங்காயத்தை அரைத்து முன் நெற்றி, பக்கவாட்டு நெற்றியில் பற்றுப் போடத் தலை வலி குறையும்.

மாரடைப்பு நோயாளிகள், இரத்தநாளக் கொழுப்பு உள்ளவர்கள் சின்ன வெங்காயம் சாப்பிடுவது நல்லது.

சின்ன வெங்காயச்சாறு கொழுப்பை உடனே கரைக்கும்.

எனவே, இவ்வளவு நன்மைகளைத் தரக்கூடிய சின்ன வெங்காயத்தைத் தினசரி நம் உணவில் சேர்த்துக் கொள்வோம்... நலம் பெறுவோம்...

★ நன்றி: இணையம்

**வஞ்சகத்தால் நண்பனையோ,**
**கபடத்தால் தர்மத்தையோ,**
**பிறரைக் கொடுமைப்படுத்திப்**
**பெரும் செல்வத்தையோ,**
**கஷ்டம் இல்லாமல் வித்தையையோ,**
**பலாத்காரத்தால் பெண்களையோ**
**அடைய முயலுபவன்**
**நிச்சயம் முட்டாளே!**

— பஞ்சதந்திரம் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புனிதருக்குள்ளே அற்புதங்களாலும் அருஞ்செயல்களாலும் பெயர் பெற்ற ஒரு மாணிக்கமாய்த் திகழ்பவர் புனித அந்தோனியார். இவர் போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பனில் 1195ம் ஆண்டு ஆவணித் திங்கள் 15ம் நாள் மரியன்னையின் விண்ணேற்பு விழா அன்று மண்ணில் மலர்ந்தார். இவரின் தந்தை மார்ட்டின், லிஸ்பன் நகரத்து ஆளுநராய்ப் பதவி வகித்தார். வீரம் மிக்கவர், நேர்மையாளன் என மக்கள் மனதாரப் புகழ்ந்தனர். இவரது அன்னை தேவரா தெரேசம்மாள் அழகானவள். நற்குணங்கள் படைத்த அற்புத அன்னை. இவ்விருவருக்கும் மகனாய்ப் பிறந்தவர் புனித அந்தோனியார். இவருக்குப் பெற்றோர் கொடுத்த பெயர் பெர்தினாந்து. இவர் புனித பிரான்சிஸ்குவின் சபையில் சேர்ந்தபோது தேர்ந்தெடுத்த பெயர் அந்தோனி. இவருக்கு இரண்டு சகோதரிகளுமிருந்தனர். இவரின் இளைய சகோதரி துறவறச் சபை ஒன்றில் சேர்ந்துகொண்டாள். மற்றவர் திருமணம் செய்து நல்லறம் நடத்தினார். புனித அந்தோனியார் 36 ஆண்டுகளே மண்ணில் வாழ்ந்தார். ஆனால், செய்த சேவையும், புதுமைகளும், சொன்ன போதனைகளும் எண்ணிலடங்காதவை. இறைவார்த்தையைத் தன் வாழ்வாக்கினார். பிறரும் அப்படி வாழத் தன் போதனைகளால் வழிகாட்டினார்.


தூய அந்தோனியார் பீடப் பணியாளராக இருந்தபோது அலகையை விரட்டிய சம்பவம்

சிறு வயதில் அவர் செய்த முதல் புதுமை மிகவும் வியப்பிற்குரியது. இவர் பீடப் பணியாளராக இருந்தபோது ஒரு நாள், ஆலயத்தில் நற்கருணையின் முன்னிருந்து மிகுந்த பக்தியுடன் தியானம் செய்துகொண்டிருந்த போது, தியானத்தைக் கெடுக்க கரிய நிறத்தில் கோர உருவமுடன் அவர் முன் தோன்றிய சாத்தானைக் கண்ட புனிதர் சிறிது அச்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் பக்...

....2ம் ஜெயவீர தன் குடும்பத்துடனும், சகல அதிகாரிக ளுடனும் திருகோணமலைக்குத் தப்பி ஓடினார். இங்கு இவரும் இவரது குடும்பத்தினரும், அதிகா ரிகள் சிலரும் அம்மை நோயினால் பீடிக்கப்பட்டு இறந்தனர். அரசன் இறப்பதற்குமுன் தன் மரு மகனான ஜெமசிங்க பண்டாரவை அரசனாக நியமித்துத் தன் ஒரு வயதுப் பெண் குழந்தை யையும் அவரிடம் ஒப்படைத்தார். அவள் வயது வந்ததும் மனைவி ஆக்கிக் கொள்ளுமாறு கூறி அரசன் உயிர் துறந்தான். போர்த்துக்கேயர் இவரைக் கோவை அழைத்துச் சென்று இவருக்குத் திருமுழுக்குக் கொடுத்து டொன்பிலிப் என்ற பெயரை வைத்தனர். குழந்தை யாழ்ப்பாணத் திற்குக் கொண்டுசெல்லப்பட்டுப் பரராஜசேகரத்திடம் ஒப்ப டைக்கப்பட்டு திருமுழுக்கு கொடுக்கப்பட்டு டோனா கத்தரினா எனும் பெயரிடப்பட்டுக் கல்வி பயின்றாள்.

கண்டி அரசன் ராஜசிங்கன் கிறிஸ்தவர் களை மிகவும் துன்புறுத்தினான். இதனால், 1584ல் டொன் பிலிப்பு போர்த்துக்கேயரின் உதவியுடன் கண்டி அரசனுடன் போர்தொடுத்து, அரசைக் கைப்பற்றினான். இதனால், டொன் பிலிப்பு அரசனாகவும், அவர் மகன் டொன் யுவான் பட்டத்து இளவரசராகவும் பிரகடனப்படுத்தப்பட்டனர். பின்னர் தந்தை இறந்ததும், போர்த்துக்கேயர் டொன் யுவானை அரசனாக்கினர். ஆனால், கோணப்புப் பண்டார எனும் இவரின் படைத் தளபதிக்குப் பௌத்த மக்களின் ஆதரவு இருந்ததால் கலகம் செய்து விமலதர்மசூரியன் எனும் பெயருடன் அவன் அரசனானான். இதனால், டொன் யுவான் கண்டியி லிருந்து வெளியேற்றப்பட்டான். 1594ல் மீண்டும் போர்த்துக்கேயரால் கண்டி கைப்பற்றப்பட்டது. இதனால், 1594ம் வருடம் ஆடி மாதம் 6ம் நாளில் டோனா கத்தரினா பட்டத்து அரசியானாள். மீண்டும் விமலதர்மசூரியன் இவர்களுக்கெதிராய்க் கலகம் செய்து அரசியைத் தன் மனைவியாக்கினார். இதனால், போர்த்துக்கேயர் தோற்கடிக்கப்பட்டனர். கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர். இவ்வாறு கண்டியில் ஒருபோதும் கிறிஸ்தவம் உறுதியாக நிலைபெற்றிருக்கவில்லை.



கொண்டாலும், இறை நம்பிக்கை கொண்டு தான் முழந்தாட்படியிட்டிருந்த சலவைக் கல்லில் தளரா விசுவாசத்துடன் வெற்றியின் சின்னமான சிலுவை அடையாளத்தைத் தன் கரத்தால் வரைந்தார். இந்த அடையாளம் "கல்லில் உளியால் செதுக்கியது போல்" ஆழப் பதிந்து விட்டது. அலகை அலறிக் கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றது. சிலுவை அடையாளத்தின் மகிமையைப் புனிதர் நன்கு உணர்ந்திருந்தார். இச் சிலுவை அடையாளம் இன்றும் பாதுகாக்கப் பட்டு வருகின்றது. இலட்சக்கணக்கானோர் அதனைப் பார்வையிட்டும் வருகின்றனர். இந் நிகழ்ச்சி புனித அந்தோனியாரின் உள்ளத்தில் ஒரு துறவியாக வரத் தீர்மானிக்கத் துணை புரிந்தது.

புனித அந்தோனியார் பலகோடிப் புதுமைகள் புரிந்தும், மனதை மாற்றக்கூடிய மறை உரைகள் வழங்கியும் வந்தமை பலரை இறைவன்பால் அன்பு கொண்டு அவரை அண்டிவரச் செய்தன. புனித அந்தோனியார் கோடிப் புதுமைகள் இன்றும் புரிந்து வருகின் றார். காரணம், தன் பக்கம் பக்தர்களை ஈர்த்துக் கொள்ளவல்ல. மாறாக, இறைவனை அவர்கள் நாடிச் செல்ல வழிகாட்டி வருகின் றார். இம்மாதம் 13ந் திகதி புனிதரின் திரு நாளாகும். அவர் மூலம் ஆண்டவரில் அடைக்கலம் புகுவோம்.

அருட்சகோதரி: லூர்ட்ஸ் F.M.M



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கோப்பைப் பால்

றெ. சிதம்பரி

பிரான்ஸ் தேசத்தில், பரீஸ் தலை சிறந்து நிற்கும் ஒரு நகரம். நகரப்புறத்தின் தொலை தூரத்தில் மலைச்சாரல்கள், நதிகள், அழகிய மரங்கள் நிறைந்த அழகிய சூழலிலே பிரபுக்கள் வசிக்கும் மாட மாளிகைகள் நிறைந்து காணப்பட்டன. அதற்கும் அப்பால் பல கிராமங்களும் காணப்பட்டன. பிரபுக்கள் வம்சத்தில் மிகக் கண்ணியமானவராக ஜோன் வெஸ்லி விளங்கினார். இவர் மனிதாபிமானம் கொண்டவர். இவரது மனைவி ஆன்மேரியும் மிகவும் ஞானத்துடன் தன் குடும்பத்தை நடத்தியது மட்டுமன்றி ஏழை எளியவர்க்கும் உதவிக் கரம் நீட்டும் சீமாட்டியாகவும் வாழ்ந்து வந்தாள்.

கிராமப் புறத்தில் ஓர் இளம் விதவைத் தாயாரும், அவளது பத்து வயது மகனும் சிறியதொரு வீட்டில் வசித்து வந்தனர். பாரிய விபத்தொன்றில் கணவனை இழந்த அவள் சிற்றுண்டிகள் தயாரித்தும் தையல் வேலைகள் செய்தும் தன் சீவியத்தை ஓட்டிவந்தாள். சிறுவன் அதிகாலையில் எழுந்து சிற்றுண்டிகளை விற்று வந்தபின் பாடசாலைக்குச் சென்று படித்து வருவது வழக்கம்.

ஒரு நாள் அதிகாலை வேளை, கொட்டும் பனிக் குளிரையும் பாராது சிற்றுண்டிகளை எடுத்துக் கொண்டு சென்றான் சிறுவன். வியாபாரம் எளிதாக முடியவில்லை. ஓடி ஓடிச் சென்று தன் வியாபாரத்தை முடித்துக் கொண்டான். குளிரும் பனிக் கொட்டலும் நடுக்கத்தை வருவித்தது. காய்ச்சல் வரும் போலிருந்தது. தாகம் அதிகரித்தது. கண்கள் இருண்டன. எதிரே இருந்த வீட்டு வாசலண்டை சென்று கதவைத் தட்டினான். அங்கு வந்த சீமாட்டியிடம் தாகத்திற்குக் கொஞ்சம் நீர் தரும்படிக் கேட்டான். அவன் நிலையை உணர்ந்துகொண்ட வீட்டுத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவி ஆன்மேரி என்ற சீமாட்டி சூடாக ஒரு கோப்பைப் பால் கொண்டு வந்து குடிக் கும்படி கூறினாள்.

"இல்லை அம்மா, தண்ணீர் கொஞ்சம் போதும். உங்களுக்கு வீண் சிரமம் வேண்டாம்" என்றான் சிறுவன்.

"இல்லை நீ இதைக் குடித்துக் களைப்பாறு" என்று சொல்லி ஆதரவு காட்டினாள் ஆன் மேரி. சிறுவனும் விடை பெற்றுச் சென்றான்.

ஆண்டுகள் பல உருண் டோடின. அந்நாட்டில் கலவரங்கள் ஏற்பட்டு நாடு, நகரம், கிராமம் அனைத்தும் தீக்கிரையாக் கப்பட்டன. மக்களில் அனேகம்பேர் மாண்டொ ழிந்தனர். ஆன்மேரி மட்டும் தனித்து விடப்பட்டாள். அவள் கணவன், பிள்ளைகளிருவர், பணியாட்களனைவரும் கொல்லப்பட்டனர். அவள் உறவினர் ஒருவரின் வீட்டில் ஒதுங்கிய நிலையில் வாழ்ந்து வந்தாள். சில நாட்களின் பின்னர் நாடு நகரம் யாவும் புனருத்தாரணம் செய்யப்பட்டு வந்தன. எனினும் பலர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ வேண்டியே ஏற்பட்டது. இந்நிலையில் இந்த முதாட்டி கடும் நோயுற்றார். எனவே, அயல வர்கள் அவளை மருத்துவமனையில் சேர்த்தனர். வாரங்கள் மாதங்களாயின. டாக்டரின் கண்காணிப்பினாலும், தாதியரின் அன்பான பராமரிப்பினாலும் குணமடைந்தாள். அவள் மருத்துவமனையி லிருந்து வெளியேறும் நாள் வந்தது. மருத்துவச் செலவிற்கான ரசீதைக் கொடுத்தார்கள். அவளிடமோ பணம் குறைவாகவே இருந்தது.

'என்ன செய்வது... மீதிப்பணத்தை எப்படிக் கட்டுவது...?' என எண்ணி அழுது தீர்த்தாள். ஆழ்ந்த யோசனையுடனும் விசுவாசத்துடனும் பணம் கட்டும் இடத்திற்குச் சென்றாள். அந்த இடத்திலிருந்த பெண் அவளைக் கண்டவுடன் ஒரு ரசீதை நீட்டினாள். அதை வாங்கிப் படித்துப் பார்த்த அவள் மிகுந்த ஆச்சரியப்பட்டாள். இறைவனின் வியத்தகு செயலை நினைத்து நன்றியோடு கண்ணீர் வடித்தாள்.



**சீராக் நூலிலிருந்து ...**

"உள்ளம் உடைந்தோர்க்குத் துயரங்களைக் கூட்டாதே. வறுமையில் உழல்வோருக்குக் காலம் தாழ்த்தாமல் உதவி செய். துன்புறுவோரின் வேண்டுதலைத் தள்ளிவிடாதே. ஏழையரிடமிருந்து உன் முகத்தைத் திருப்பிக்கொள்ளாதே"

ரசீதின் கீழ்ப்புறத்தில் ஒரு கோப்பைப் பால் என எழுதப்பட்டிருந் தது. மூதாட்டிக்கு ஒன்றுமே புரிய வில்லை. இதுபற்றி அப்பெண்ணிடம் வினவினாள்,

"பெரிய டாக்டர்தான் பணம் கட்டினார். விபரம் எதுவும் தெரிய வில்லை" என்று கூறினாள் அவள். உடனே பெரிய டாக்டரின் அறையை நாடிச்சென்ற அம்மூதாட்டி முத லில் தன் நன்றியைத் தெரிவித் துக் கொண்டு,

"ஒரு கோப்பைப் பால்' என்று ஏன் குறிப்பிட்டிருந் தீர்கள்" என்று கேட்டாள்.

அவரும், "என்னை நன்றா கப் பாருங்கள். உங்களுக்கு என்னை ஞாபகம் இல்லையா...?" எனக் கேட்டு சிறு வயதில் கடுங் குளிரில் அவள் பால் கொடுத்த நிகழ்வை டாக்டர் கூறினார். மகிழ்ச்சியுடன் மூதாட் டியை அணைத்துக் கொண்டார்.

மூதாட்டியின் தற்போதைய நிலை பற்றிக் கேட்டு அறிந்துகொண் டார். தன் தாய் கலவரத்தில் இறந்ததை யும் பங்குத் தந்தையின் ஆதரவில் தான் படித்து முன்னேறியதையும் தெரி வித்துக் கொண்டார். தன் அருமைத் தாயின் நினைவாக மூதாட்டியைத் தன்னுடன் அழைத்துச் சென்று அவளை மிகவும் அன்புடன் பராமரித்துப் பாது காத்தார். சீமாட்டி செய்த ஒரு சிறு செயல் அவருடைய முதுமைக் கால வாழ் வைச் சிறக்கச் செய்தது. தாகத்தால் தவித்து வருபவருக்குப் பால் கொடுக்கா விடினும் ஒரு குவளைத் தண்ணீர் கொடுத்தாவது மோட்ச சம்பாவனை யைத் தேடிக்கொள்ளலாமல்லவா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆனி – 2015

- மற்றில்டா இராஜேந்திரம் -

**ஆனி 4ந் திகதி :**

**புனித பிரான்சிஸ் கறக்சியோலோ:**



இவர் நேப்பிள்ஸ் இராச்சியத்தில் பிறந்தவர். சிறு வயது முதற்கொண்டே பக்தி மிக்கவராக வளர்ந்தார். இளமையில் இறைவனது அழைப்புக்குச் செவிமடுத்துத் தன்னை இறைவனுக்கே அர்ப்பணித்தார். நேப்பிள்சில் குருத்துவ வாழ்வில் இணைந்து கொண்டார். தன் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்ட இவர் விசேடமாக மரண வேளையில் கைவிடப்பட்டோருக்கு உதவியாக இருந்தார். பிராந்திய நிர்வாகத்தின் விருப்பின்படி இவர் ஜோன் அகுஸ்தின் அடோனாவுடனும், பேப்ரிசியஸ் கறக்சியோலோவுடனும் இணைந்து சிறிய குருமட மாணவர்க்கான ஒரு சபையை உருவாக்கப் பணிக்கப்பட்டார். தன் பணி வாழ்வில் ஈடுபடுகையில் தன் பெயரான அஸ்கானியோ என்பதைப் புனித பிரான்சிஸ் அசிசியாரை மரியாதை செய்யும் முகமாகப் பிரான்சிஸ் என மாற்றி வைத்துக்கொண்டார். இரு வருடங்களின் பின் அடோனாவின் மறைவுக்குப் பின் இவர் சபையின் மேலாளர் ஆனார். தமது சபையை விஸ்தரிப்பதற்கென மூன்று தடவைகள் ஸ்பெயின் நாடு சென்றார். அப்பயணங்களை ஏறக்குறைய புனித யாத்திரைகள் போன்றே மேற்கொண்டு, செல்லும் வீதிகளில் பிச்சையெடுத்துப் பாண் உண்டார். இந்தப் பயணங்களில் மிகக் கொடிய வேதனைகளை அனுபவித்த போதிலும், ஸ்பெயின் நாட்டில் பல இல்லங்களை அமைக்க முடிந்ததையிட்டுத் திருப்தியடைந்தார். இதற்கு 2ம் பிலிப் மன்னனும், அவரது மகன் 3ம் பிலிப் மன்னனும் உதவினர். 1598ம் வருடத்தில் அனைத்தும் நிறைவேறின. பின் உரோம் நகருக்குத் தன் இருப்பிடத்தை மாற்றிக் கொண்டு வறியோருக்கும், தொழுநோயாளருக்கும் பணி புரிந்தார். இவர் 1608ம் வருடம் ஆனித் திங்கள் நான்காம் நாளன்று அக்னோன் எனுமிடத்தில் அமைந்திருந்த ஓரட்டோரியன் சபை அருட்தந்தையரின் இல்லத்தில் தன் இறுதி மூச்சை நீத்தார்.

**ஆனி 5ந் திகதி :**

**புனித பொனிபஸ்:**



இவர் ஜெர்மனியின் திருத்தூதர் என அழைக்கப்படுகிறார். இங்கிலாந்து தேசத்தில் உள்ள டிவோன்ஷயர் எனுமிடத்தில் 680ம் வருடம் இவர் பிறந்தபோது இவரது திருமுழுக்குப் பெயராக வின்பிறிட் என்ற பெயரிடப்பட்டது. பதின்மூன்று வயதானபோது எக்செட்டரில் இருந்த பெனடிக்டைன் துறவற இல்லத்தில் கல்வி பயின்றார். பின்னர் வின்செஸ்டர் மறைமாநிலத்திலுள்ள நேர்ஸ்லிங் எனுமிடத்தில் மகிழ்வுடன் கல்வியைத் தொடர முடிந்தது. சிறிது காலத்தின் பின் குருமட அதிபர் இவரை ஆசிரியராக நியமித்தார். முப்பது வயதில் குருப்பட்டம் பெற்றார். அவரது அதிபரின் அனுமதி பெற்று 716ம் வருடம் பிரிஸ்லாந்து சென்று போதித்தார். இவரது முதல் முயற்சி தோல்வியடைந்ததால், இவரது அதிபர் தனது இல்லத்துக்குத் இவரைத் தெரிவுசெய்தபோது, பெரும் பதவியை இராஜினாமாச் செய்து இங்கிலாந்து திரும்பினார். 719ம் வருடத்தில் உரோமுக்குச் சென்று பரிசுத்த பாப்பரசர் 2ம் கிரகறியைச் சந்தித்தார். இவர் மூலம் ஆயர் அனுப்பியிருந்த கடிதத்தை வாசித்த பாப்பரசர் இவர் ஜெர்மனிய மக்களுக்குத் தாராளமாக விசுவாச போதனை செய்யச் சம்மதம் வழங்கினார். பின்னர் ஜெர்மனியில் சில மறைமாவட்டங்களையும் உருவாக்கினார். விசுவாசத்தைப் பரப்பச் சென்ற பிரிஸ்லாந்தில் இவரது பணியின் மகிமையால் இறுதியில் பெரும் பயன்களை அடைந்தார். இவர் 755ம் வருடம் ஆனித் திங்கள் ஐந்தாம் நாள் இறைபதம் அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியாளின் புகழ் ........ (02)

## உலகெங்கும்

### மேகத்தின் மாதா :

க்விட்டோ, ஈக்வடார் (1696)




க்விட்டோ மறைமாநிலத்தின் ஆயர், சாஞ்ச்சோ டி ஆன்டிரேட் ஒய் ஃபிகுரோ கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தபோது அவரது உடல்நலத்தில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமெனப் பிரார்த்தித்து நமது அன்னையின் திருச்சிலை ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. 1696, டிசம்பர் 30 அன்று பிற்பகல் 4.45 மணியளவில் இந்த ஊர்வலம் புனித பிரான்சிஸ் ஆலயத்தைச் சென்றடைந்தபோது செபம் செய்வதற்காக ஆலயமணி அடிக்கப்பட்டது. உயர்மறைமாவட்ட ஆவணகத்தில் உள்ள அதிகாரபூர்வ ஆவணங்களின்படி, க்வாப்லோ மற்றும் க்வின்சே என்ற இரு இடங்களுக்கு இடையே மேகத்தில் கன்னிமரியாள் அமர்ந்திருப்பதை டான் ஜோஸ் டி உலோவா என்ற குருவும் அதன்பிறகு அங்கு கூடியிருந்த அனைவரும் பார்த்தனர். அன்னையின் தலையில் மகுடமும் வலக் கையில் லில்லி மலரும் மற்றும் இடக் கையில் குழந்தையைத் தாங்கியவாறும் அந்த தரிசனம் அமைந்திருந்தது. ஆயர் நோயிலிருந்து குணமடைந்தார். முழுமையாகக் குணம்பெற்ற பிறகு மேகத்தின் மாதாவுக்கு பக்தி முயற்சிகள் செய்ய அவர் அனுமதியளித்தார்.

### சிந்திக்க சில வரிகள் ... 3

உலகிலே பிறந்தோர் துஞ்சுவர்
இது இயற்கை நியதி
உண்மையிது இறப்பு வரை
இனியன செய்து கதி யடைவோம்.

– ராஜ்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதான் அரசியல்

- பாழூர் வேந்தன் -

கடந்த ஓரிரு வாரங்களாக எல்லாமே ஒரே குழப்பம், மூடு மந்திரங்கள், வாய்ச் சவுடால்கள். நடக்குமா நடக்காதா? என்றபடி கேள்விக் குறிகள். எதிர்க்கட்சி என்ற ஒன்று நாட்டில் உள்ளதா? இருந்தால் யார் அந்த எதிர்க் கட்சியாளர்கள்? இப்படியாக மனதுக்குள் ஒரே புகைச்சலாக இருந்தது. ஒன்று நிதர்சனமாகியது; தமிழனுக்கு எந்த முக்கியத்துவமும் அளிப்பதில்லை, அளிக்க வும் கூடாது என்கின்ற மனப்பான்மை மீண்டும் ஒருமுறை வெளிச்சமாகியது. முன்னர் அமிர்த லிங்கம் அவர்களது எதிர்க்கட்சி அரசியல் தந்த ப(ய)(ட)ம் மனதை விட்டுப் போகவில்லை என்பது புலனாகிற்று.

எப்படியாகவிருந்தாலும் 19 ஆவது திருத்தம் ஒத்துவரப்பட்டு நிறைவேறிற்றென்பது ஒரு ஆறுதல். அதற்கடுத்தும் பாயக் கூடும் என்கின்ற பேச்சுக்கள் வேறு. 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிய ஜனாதிபதி மைத்திரி பால அவர்களைப் பாராட்டத்தான் வேண்டும்.




நினைத்ததைச் சாதித்துள்ளார். சாதித்தது நடைமுறையில் வரவேண்டும். இருந்தும் தமிழர் பிரச்சினைக்கு எதை நினைத்து வைத்திருக்கின்றார் என்பதுதான் தெரியவில்லை.

முன்னயை அமைச்சர்கள் கைதாகிக் கொண்டிருப்பது நம்பிக்கை ஒளியாக நீதி வேண்டுபவர்க்குத் தென்படுவது ஆச்சரியமில்லை. 'தம்பி திரும்பி வரான்' என எண்ணியிருந்தவர்க்கு அவன் வந்ததும், கைதானதும் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது. 'தம்பியுடையான் படைக்கு மஞ்சான்' என்ற நினைப்போடு அனைத்துமே 'தனி வழி' யில் போய்க்கொண்டிருந்தது. ஆனாலும் இந்தத் தம்பி குறித்து அச்சம் நிரம்பவே இருக்கிறது என்பது மட்டும் உண்மை. 'காக்க காக்க தன்னைக் காக்க' என்று அவன் புறப்பட்டுவிட்டால் 'கூண்டோடு கைலாயமாகி விடும் வாழ்வு' என்கிற பயப் பீதி உண்டு. 100 நாட்களில் பலதும், எதிலும் கால தாமதாகி வருவது கண்டு உசார் கொண்டு மீளுயிர் கொள்ள முனைந்தவர் தமக்கு இந்தக் கைதுகள் ஆபத்தான செய்தியைக்கொடுத்திருக்கும். இதனால் பேச்சுவார்த்தையில் இறங்கியது மட்டுமல்ல, பிரதான வேட்பாளராகக் களமிறங்கவும் முனைவது தான் ஆபத்து. தப்பிக்கவும், பழிவாங்கவும் அதிகா ரம் வேண்டுமல்லவா?

இது ஒருபுறம் இருக்க, நேபாளத்தைத் தாக்கிய பேரிடிக்குள்ளும் உலக நாடுகளின் அரசியல் வேறு அரங்கேறுகிறது. இந்தப் போட்டி அரசியலால் நிவாரணங்கள் மக்களைச் சென்றடை வதில் தடங்கல் கள். அமெரிக்கா வுக்குள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணிப்பார்க்கையில்...

**வா**ழ்க்கையில் பலர்
சரியான நேரத்தில் சரியான முடிவுகளை
எடுக்காததால் தவறுகள் செய்கின்றனர்.
இன்னும் பலர்
தேவையான நேரத்தில் முடிவினை
எடுக்காததால் தவறிப் போகின்றனர்!
முடிவு எடுப்பதென்பது வாழ்வில்
தவிர்க்க முடியாத அம்சம்!
முடிவெடுப்பதென்பது வாழ்வில்
மாற்ற முடியாத நியதி!!
முடிவுகளில் தவறுகள் நேரலாம்
அதனால் பல இன்னல்கள் ஏற்படலாம்
இருந்தும் அனுபவங்களை வைத்து
ஆழமாக எண்ணிப் பார்க்கையில்,
தவறான முடிவால் வரக்கூடிய
இடரைக் காட்டிலும்
முடிவெடுக்காமல் இருப்பதே
பாரதூரமான விளைவைத் தரும்
என்பது மனதுக்குப் புலனாகும்!

- ஆனந்தா ஏ.ஜீ. இராஜேந்திரம் -

ஐ.எஸ் தாக்குதல் வேறு தலை தூக்கியுள்ளது! மேற்கு நாடுகள், அதிலும் குறிப்பாக அமெரிக்கா என்றுமே தன் முன்னுரிமைக்கே உலகில் இடம் கொடுத்து வருவது அதன் நடைமுறை. இதனால் பலப் பல நாடுகளில் நிம்மதி தொலைந்து போய்விட்டது. உயிர்கள் காவு வாங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. தன்னலன் கருதி அமெரிக்கா தனக்கெதிரானவர்கள் என்றுஅடையாளம் காணப்பட்டவர்களை அந்தந்த நாட்டு ஆட்சியிலிருந்து வெளியேற்ற எதுவும் செய்யும். கொங்கோ தொடக்கம் அதன் போக்கே இப்படியாகத்தான் இருந்து வருகிறது. குட்டையைக் குழப்பி விட்டுமீன் பிடிக்க முயல்வது அதன் போக்கு. இருந்தாலும் சமீபத்திய ஈரான், ஈராக், சிரியா போன்ற நாடுகளின் ஆட்சித் தலைவர்களை அப்புறப்படுத்த பல ஆயுதக் குழுக்களை அது உருவாக்கியது. ஆட்சியாளர்களும் அகற்றப்பட்டார்கள். ஆனால் அதன் விளைவு? அங்கெல்லாம் சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்கு அளப்பரிய அச்சுறுத்தல்கள். அதுமட்டுமல்ல, பொல்லைக் கொடுத்து அடி வாங்கின கதையாட்டம் வழங்கப்பட்ட ஆயுதத்தைப் பயன்படுத்தி மேலும் பல ஆயுதங்களைத் தேடிக்கொண்டு அப்பாவிகளின் உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றன. தனித்து நின்று அடக்க முயன்றால் குளவிக் கூட்டில் கல்லெறிந்ததாகிவிடும். மீண்டும் 'செப்டெம்பர் 11' ஐ விரும்பவில்லை அமெரிக்கா! மத்திய நாடுகளையே முன்னுக்குத் தள்ளியிருக்கிறது. இலங்கையிலும் அதன் தலையீட்டினால் மாற்றம் நடந்தது உண்மை. ஆனால் ஒரு சிலர் நினைத்தவாறு பெரிய அச்சுறுத்தல்கள் எதுவும் நடைபெறவில்லை என்பது ஒரு பெரும் ஆறுதல்.

தமிழர் பிரச்சினையிலும் தலையிட்டு 'தானே ஆபத்பாந்தவன்' என்று முனைப்பாக நின்றது; 'உரிமை மீறல்', 'கொடு தண்டனை' என்று முந்திக்கொண்டு நின்றது. அது விரும்பிய ஆட்சி மாற்றம் நடந்து விட்டது. இப்போது கெர்ரி அவர்கள் 'எல்லாம் நலமே எல்லோரும் நலமே' என்பதுபோல் சான்றிதழ் கொடுத்துப் போயிருக்கிறார்.

மீண்டும் வரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஅவைச் செய்திகள்

✱


திருத்தந்தை பிரான்சிஸ் தனது ஈராண்டு தலைமைப் பணியில் 829 பேரைப் புனிதர்களாகவும், 677 பேரை அருளாளர் பட்டம் பெற்றவர்களாகவும் அறிவித்துள்ளார்.

✱

புனித ஜான் போஸ்கோ பிறந்ததன் 2ம் நூற்றாண்டு நினைவாக தூரின் நகருக்கு வருகை தரும் திருப் பயணிக ளுக்கு, ஏப்ரல் 19ம் தேதி முதல் ஜூன் 24ம் தேதி வரை இயேசுவின் அடக்கத்திற்கு பயன்படுத்தப்பட்ட புனிதத் துணி மக்களின் பார்வைக்கு வைக்கப்படும்.

✱

வரும் செப்டம்பரில் பிலடெல்ஃபியாவில் நடைபெறவிருக்கும் உலகக் கத்தோலிக்கக் குடும்பங்கள் மாநாட்டுக்குச் செல்லும் திருத்தந்தை, வெள்ளை மாளிகைக்கும் செல்கிறார். செப்டம்பர் 24ம் தேதி அமெரிக்கக் காங்கிரஸ் அவையிலும் உரையாற்றுகிறார். இந்நிகழ்வு, திருத்தந்தையர் வரலாற்றில் முதன்முறையாக இடம்பெறுகிறது.



✱

இந்தியாவில் விவசாயிகளின் தற்கொலை, தலத் திருஅவை மற்றும் குடும் பங்களுக்கு ஆழமான காயமாக உள்ளது என்று இந்திய ஆயர் பீலிக்ஸ் அந்தோணி மச்சாடோ கூறினார்.

✱

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை உலகின் நான்காவது மிகப் பெரிய தலைவராக அறிவித்துள்ளது, புகழ்பெற்ற ஃபார்ச்சூன் வணிக இதழ். உலகின் ஐம்பது மிகப் பெரியத் தலைவர்கள் பட்டியலில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியும் இடம்பெற்றுள்ளார்.

✱

கருத்தடை, கருக்கலைப்பு, உயிரணு மாற்ற ஆய்வுகள், தற்கொலைகள் என்று இவ்வுலகம் அழிவுக் கலாசாரத்தை நோக்கிச் செல்கிறது. நாம் மனம் தளராமல் உயிரைப் போற்றிக் காக்கும் முயற்சிகளைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டுமென வத்திக்கான் உயரதிகாரி கர்தினால் லொரன்ஸோ பல்டிசேரி கூறினார்.

- **வத்திக்கான் வானொலி** -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய மஞ்சரி

**அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் அவர்கள் தனது மகனின் தலைமையாசிரியருக்கு எழுதிய கடிதம் மிகவும் பிரசித்தமானது. அதனை இலக்கிய மஞ்சரி வாசகர்கட்கு தருவதில் மகிழ்வடைகின்றோம்.**

அன்பான ஆசிரியரே!

அனைத்து மனிதர்களும் நேர்மையானவர்கள் அல்ல. அனைத்து மனிதர்களும் உண்மையானவர்கள் அல்ல என்பதை எனது மகன் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனாலும், மனிதர்களில் அயோக்கியர்களுக்கு இடையில் உண்மையான கதாநாயகர்களும் இருக்கிறார்கள் என்பதையும், சுயநல அரசியல்வாதிகளுக்கு இடையில் அர்ப்பணிப்பு மிக்க தலைவர்களும் இருக்கிறார்கள் என்பதையும், பகைவர்களுக்கு இடையில் நண்பர்களும் இருக்கிறார்கள் என்பதையும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

அவனுக்குப் பொறாமைக் குணம் வந்துவிடாமல் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். மௌனமாக ரசித்துச் சிரிப்பதன் இரகசியத்தை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். எதற்கெடுத்தாலும் பயந்து சுருங்கிக்கொள்வது கோழைத்தனம் என்பதைப் புரியவையுங்கள். புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை அவனுக்குத் திறந்து காட்டுங்கள். அதேவேளையில் இயற்கையின் அதிசயத்தை இரசிக்கவும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். வானில் பறக்கும் பறவைகளின் புதிர் மிகுந்த அழகையும், சூரிய ஒளியில் மின்னும் தேனீக்களின் வேகத்தையும் பசுமையான மலை அடிவார மலர்களின் வனப்பையும் ரசிப்பதற்கும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

ஏமாற்றுவதைவிடவும் தோல்வியடைவது எவ்வளவோ மேலானது என்பதைப் பள்ளியில் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். மற்றவர்கள் தவறு என்று விமர்சித்தாலும், தனது சுயசிந்தனை மீது அசைக்கமுடியாத நம்பிக்கை வைக்க அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். மென்மையான மனிதரிடம் மென்மையாகவும், முரட்டுக்குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுகுவதற்கு அவனுக்குப் பயிற்சி கொடுங்கள். கும்பலோடு கும்பலாய்க் கரைந்து போய்விடாமல் எந்தச் சூழ்நிலையிலும் தனது சொந்த நம்பிக்கையின்படி சுயமாகச் செயல்படும் தைரியத்தை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும். எனினும் உண்மை என்னும் திரையில் வடிகட்டி நல்லவற்றை மட்டும் பிரித்து எடுக்க அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். கண்ணீர் விடுவதில் தவறில்லை என்றும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

போலியான நடிப்பைக் கண்டால் எள்ளி நகையாடவும், வெற்றுப் புகழுரைகளைக் கண்டால் எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்குப் பயிற்சி கொடுங்கள். தனது செயல்திறனுக்கும், அறிவாற்றலுக்கும் மிக அதிக ஊதியம் கோரும் சாமர்த்தியம் அவனுக்கு வேண்டும். ஆனால், தனது இதயத்திற்கும், தனது ஆன்மாவிற்கும் விலை பேசுபவர்களை அவன் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. பெருங்கும்பல் திரண்டு வந்து கூச்சலிட்டாலும், நியாயம் என்று தான் நினைப்பதை நிலைநாட்டத் தொடர்ந்து போராடுவதற்கு அவனுக்கு நம்பிக்கை கொடுங்கள். அவனை அன்பாக நடத்துங்கள். ஆனால், அதிக அன்பும் செல்லமும் காட்டிச் சார்ந்திருக்க வைக்க வேண்டாம். ஏனென்றால், கடுமையான தீயில் காட்டப்படும் இரும்பு மட்டுந்தான் பயன்மிக்கதாக மாறுகிறது.

தவறு கண்டால் கொதித்து எழும் துணிச்சலை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். அதேவேளையில் தனது வலிமையை மௌனமாக வெளிப்படுத்தும் பொறுமையை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். அவன் தன்மீதே மகத்தான நம்பிக்கை வைக்க வேண்டும். அப்போதுதான் மனித குலத்தின் மீது அவன் மகத்தான நம்பிக்கை கொள்வான்.

இது ஒரு மிகப் பெரிய பட்டியல்தான். இதில் உங்களுக்குச் சாத்தியமானதையெல்லாம் கற்றுக்கொடுங்கள். அவன் மிக நல்லவன். என் அன்பு மகன்.

அன்புடன்,
லிங்கன்.

- ஆழியோன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரிசுப் போட்டி

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 30.06.2015

# திருவிவிலியம் கற்போம் – 144

## நீதித் தலைவர்கள் - அதிகாரம் - 4

(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)

1. ஏகூது இறந்தபின் இஸ்ரயேலர் தீயவற்றைச் செய்தபோது, கடவுள் அவர்களைக் கானானிய மன்னனிடம் ஒப்படைக்க, அவனது படைத்தலைவன் …………………….. இருபதாண்டுகளாகக் கொடுமைப்படுத் தவே, இஸ்ரயேலர் கடவுளை நோக்கிக் கூக்குரலிட்டனர்.

   அ) யாபின் ஆ) சீசரா இ) மனாசே

2. இஸ்ரயேலருக்கு இறைவாக்கினரும், இலப்பிதோத்தின் மனைவியுமான …………………… நீதித்தலைவியாக இருந்து 'தெபோராப் பேரீச்சை' என்ற மரத்தடியில் அமர்ந்திருக்க, அவரிடம் இஸ்ரயேலர் தீர்ப்புப் பெறச் சென்றனர்.

   அ) யூடித் ஆ) சாராள் இ) தெபோரா

3. நீதித் தலைவி நப்தலியில் இருந்த …………………… வாழ்ந்த அபினொவாவின் மகனை அழைத்து "ஆண்டவரின் கட்டளை இது; நீர் போய் நப்தலி, செபுலோன் மக்களைத் தபோர் மலையில் ஒன்றுகூட்டி, அவர்களில் பத்தாயிரம் பேரைச் சேரும்" என்றார்.

   அ) கெதேசில் ஆ) அரோசத்கோயிலே இ) இஸ்ரயேலில்

4. மேலும், ஆண்டவரின் கட்டளையாக "யாபினின் படைத் தலைவன் சீசராவையும், அவன் தேர்களையும், படையையும் கீசோன் ஆற்றின் அருகே இழுத்துவந்து உம் கையில் கொடுப்பேன்" என்று …………………… கூறப்பட்டது.

   அ) நீதித் தலைவியால் ஆ) சம்காரால் இ) இலப்பிதோத்தினால்

5. பாராக்கு அவரிடம், "நீர் என்னுடன் வந்தால் நான் செல்வேன். நீர் வராவிட்டால் செல்லமாட்டேன்" என்றதும் அவர் "நான் உம்முடன் உறுதியாக வருவேன். ஆண்டவர் ஒரு பெண்ணிடம் …………………………. ஒப்படைப்பார்" என்றார்.

   அ) மோவாபை ஆ) சீசாராவை இ) கெதேசுவை

6. தெபோரா பாராக்குடன் கெதேசு சென்றதும், ……………………… செபுலோனையும், நப்தலியையும் ஒன்று கூட்டியதும் பத்தாயிரம் பேர் அவர் பின் அணிவகுத்துச் சென்றனர்

   அ) யாபின் ஆ) எபேர் இ) பாராக்கு

7. கேனியரான எபேர், மோசேயின் மாமனார் ஒபாபின் மக்களான கேனியரிடமிருந்து பிரிந்து, கெதேசுக்கு அருகில் ………………….. இருந்த கருவாலி மரத்திற்கருகில் தம் கூடாரத்தை அமைத்திருந்தார்.

   அ) தபோர் மலையடியில் ஆ) கூடாரத்தில் இ) சானாமில்

8. பாராக்கு தபோர் மலைமீது ஏறிவிட்டதைச் சீசராவுக்கு அறிவித்ததும், தொள்ளாயிரம் இரும்புத் தேர்களையும் மக்கள் எல்லாரையும், அரோசத்கோயிமில் இருந்து …………………… ஆற்றின் அருகே ஒன்று திரட்டினான்.

   அ) நைல் ஆ) கீசோன் இ) யோர்தான்

9. தெபோராவின் கூற்றுப்படியே ஆண்டவர் சீசராவையும், தேர்களையும், படை முழுவதையும் வாள்முனையில் பாராக்கின் முன்னால் ……………………… சீசரா தன் தேரிலிருந்து இறங்கித் தப்பியோடினான்.

   அ) சிதறடிக்க ஆ) முறியடிக்க இ) தோற்றுப்போக

10. யாவேல் வெளியே வந்து தன்னிடம் வந்த சீசராவிடம், அஞ்சாமல் வரும்படி கூற அங்கு வந்து தங்கிய அவன், அயர்ந்து தூங்கும்போது எபேரின் மனைவி ……………………… கூடார முளையை நெற்றிப் பொட்டில் வைத்துச் சுத்தியால் அடிக்க அவன் இறந்தான்.

    அ) யாவேல் ஆ) தெபோரா இ) யூடித்

[விளாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் -144

## பரிசுப் போட்டி




(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. மனித உரிமைகள் சாசனம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தால் ஏற்கப்பட்ட தினம்
(1945.12.10 - 19.48.12.10 - 1946.10.12)

2. புளூட்டோ எனும் கிரகம் சூரியனை ஒருமுறை சுற்றிவர எடுக்கும் ஓராண்டு காலம்
(265 ஆண்டுகள் - 238ஆண்டுகள் - 248ஆண்டுகள்)

3. புவனேகபாகு போர்த்துக்கேயரது உதவியை நாடிச் சிம்மாசனம் ஏற்ற முயற்சி செய்யப்பட்டவன்:
(தர்மபாலன் - விமலதர்மசூரியன் - விக்கிரமசிங்கன்)

4. அனைவரும் வாங்கி உபயோகிக்கக்கூடிய வகையில் 1979ம் ஆண்டு செல்லிடத் தொலைபேசியை உருவாக்கிய நாடு
(அமெரிக்கா - ஜப்பான் - ரஷ்யா)

5. ‘சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை ...........................’
(நாடாது - தேடாது - கூடாது)

6. பூவோடு கூடிய நாரும் மணம் வீசும் என்பதில் ‘ஓடு’ என வருவது:
(கலப்புறுப்புப் பொருள் - அடைமொழிப் பொருள் - கலப்புறுபொருள்)

பெயர் : ..............................................................................

முகவரி: ..............................................................................

..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 144
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போட்டி முடிவுகள்...

## திருவிவிலியம் கற்போம் - 142 விடைகள்

என் குரலை, கண்ணியாக, பொக்கிம், ஆண்டவருக்கு, காகசு மலை, எகிப்தில், கொள்ளையடிப்போர், பெருந்துயரத்தில், நீதித் தலைவர்கள், இஸ்ரயேலரும்

## அறிவை வளர்ப்போம் - 142 விடைகள்

1. வீரமாமுனிவர்
2. பாயும்
3. மறதிக்கு
4. விஜயபாகு
5. எதிர்மறை
6. மேரி கியூரி

**பரிசுகள் : அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**போட்டியின் இரு பிரிவுக்கும் சரியான விடைகளை எழுதி 300/= பரிசு பெறுபவர்கள்**

- A. லிசாந்தன் ஒலிவர்,
  169/1A, லூர்த்து அன்னை ஒழுங்கை,
  பார்வீதி, மட்டக்களப்பு.
- C. டென்சியா சுஜித்ரா,
  46/75, பாரதி வீதி,
  தாண்டவன்வெளி,
  மட்டக்களப்பு.
- யே. மரிய நிதர்ஷனா,
  இலங்கை மாதா ஆலய வீதி,
  1ம் குறுக்கு, இலங்காபுரம்,
  தன்னாமுனை,
  மட்டக்களப்பு.
- செல்வி. அக்ஷிதா டேனிஷா டெரன்ஸ்,
  26/15, 3ம் குறுக்கு,
  இருதயபுரம் - மேற்கு,
  மட்டக்களப்பு.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 94 முடிவுகள்**

- **முதலாம் பரிசு - 400/=**
  C.S. சுகேஷன்,
  65/1, திருச்செந்தூர் வீதி,
  கல்லடி, மட்டக்களப்பு.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  க. அபிநயா,
  8ம் குறுக்கு,
  திராய்மடு,
  மட்டக்களப்பு.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  ஜோன் ஜிதேஷன் ஜெயராஜ்
  65/2, திருச்செந்தூர் முருகன் கோவில் வீதி,
  கல்லடி, மட்டக்களப்பு.


போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பண ஆண்டை முன்னிட்டு

## மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத்தொடர்பு நிலையம்

நடத்தும்







# குறுந்திரைப்படப் போட்டி

- போட்டியாளர்கள் பாடசாலை ரீதியாகவும் (அதிபரின் உறுதிப்படுத்தலுடன்), பங்கு ரீதியாகவும் (பங்குத் தந்தையின் உறுதிப்படுத்தலுடன்) போட்டியில் கலந்து கொள்ளலாம்.

- "சிதைந்துபோகும் குடும்பக் கட்டமைப்புகளும் அவற்றிற்கான தீர்வு பற்றிய விழிப்புணர்வும்" படத்தின் கருப்பொருளாக இருக்க வேண்டும்.

- படத்தின் கால அளவு 10.00 நிமிடங்களுக்கு மேற்படாது இருத்தல் அவசியம்.

- குறும்படத்தின் C.D. பிரதி கிடைக்கவேண்டிய இறுதிநாள் 30 ஜுன் 2015.

- நடுவர்களால் தெரிவுசெய்யப்படும் மூன்று படங்களுக்கு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறும் உலகத் தொடர்பு தின விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : இயக்குனர்
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.
தொ.பே.: 065 2226486

1ம் பரிசு – 7000/=
2ம் பரிசு – 5000/=
3ம் பரிசு – 3000/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org